உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சபாநாதர்பேரில்

# முத்துத்தாண்டவர்

பாடியருளிய கீர்த்தனம் பதம்.

விட்டுப்போயிருந்த சில கீர்த்தனங்கள்

சேர்க்கப்பட்டிருக்கின்றன

இஃது

சிதம்பரம்.

## குருநாதசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

துங்கம்பாக்கம்.

அருணகிரிமுதலியார்

அவர்களது

அம்பாள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப் பட்டது.

௧௮௯௩ ௵

உ

சிவமயம்

# முத்துத்தாண்டவர்சரித்திரம்.

சீர்தருகாவிரி திகழ்சோழ நாட்டில் அடியார்க்கருள் செய்யும்பொருட்டுப் பரமசிவம் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிராநின்ற ஸ்தலங்களுள் ஒன்றாகித் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவவதாரஞ் செய்து ஞானப்பா லுண்டருளிய மகா-க்ஷேத்திரமாகிய சீர்காழியில் வீற்றிருக்கின்ற தோணியப்பருக்கு வாச்கியத் தொண்டுசெய்யும் பேறுபெற்ற குலத்திற் றோன்றித் தாண்டவனென்கிற பேர்பெற்றுச்சிவநேசத்துடன் வளர்ந்து வருகையில் முன்வினையினால் கர்ம வியாதியொன்று சம்பவிக்க அதனால் தங்கள் குலத்துக் குரியதாகிய தொழில்கற்றுக் கொள்வதற் கில்லாமல் காலந்தோறும் ஆலயத்துக்குப்போய்ப் பிரமபுரீசரையும் திருநிலை நாயகியையுந் தோணியப்பரையும்பயபத்தியுடன் தரிசனஞ் செய்தும் மற்றக் காலங்களில் அந்த சிவலாயத்தொண்டு செய்கின்றவராய்ச் சிவநேசத்துடன் சிவநாம கீர்த்தனம்பாடிக் கொண்டிருக்கும் ஒருதாசி வீட்டுக்குப்போய் அந்ததோத்திரத்தைக்கேட்டுக்கொண்டிருப்பார் அவள் சுற்றத்தாருக்கும்இவர்சுற்றத்தாருக்கும்அந்நியொந்நிய மின்மையால் அவள்வீட்டுக்குப்போகிறது சம்மதியில்லாமல் அவரிடத்தில் வெறுப்புற்று ஆதரணைசெய்யாமலிருந்தார்கள் அப்படியிருக்கையில்ஒருநாள்மிகவும்மனவருத்தமடைந்து சிவலாயத்திற்போய்ச் சுவாமியையும் அம்மையையும் தரிசித்துத் தோத்திரம் பண்ணிக்கொண்டிருந்துபசியினால் சரீரத்துக்கிளைப்புண்டாகச்சோகத்துடன் வாகனகிட்டங்குக்குள்போய்ப்படுத்துக் கொண்டு சிவத்தியானத்துடனேநித்திரைசெய்துவிட்டார் அது அந்தக்கோயில் ஸ்தானிகருக்குத் தெரியாமையால் அர்த்தஜாம மானவுடன் கோயிற் றிருக்காப்பிட்டுக் கொண்டு போய்விட்டார்கள்

அவர்கள் போய்விட்ட பின்பு சற்றுநேரத்திற் கெல்லாம்நித்திரைநீங்கி எழுந்து மெய்ப்பிணியினாலும் பசிப்பிணியினாலும் வருந்தித்தோணி யப்பரைத் தோத்திரஞ் செய்தார் உயிருக்குயிரா யெங்கும் நிறைந்திருக்கும் பரமசிவம் அன்பனது வருத்தத்தைத் திருவுளங்

கொண்டு தம்மிடப்பாகத் துமையவளைப் பார்த்தருள அந்தக் குறிப்பையுணர்ந்து கொண்டு சகலவுயிர் களையும் பெற்றவளாகிய உமையவள் கிருபைகூர்ந்து அந்தக் கோயில் பெரியகுருக்க ளுடைய பத்துவயதுள்ள குமாரத்தியைப் போல்வந்து விசனப் படுகிறவரைப் பார்த்து நீயேன் இப்படி விசனப்படுகிறாயென்ன

தாயேநான் பூர்வம் என்னபாவஞ் செய்தேனோ தொலையாத கர்மவியாதி சம்பவிக்க அதனால் வருத்தப்படுகிறதுமன்றி வறுமைநோயென்பதொன்று நேரிட்டதனாலும் வருந்துகின்றேனென் றுசொன்னார். அதைக்கேட்டு நீவியசனப்பட வேண்டாம் உனக்குசம்பவித்திருக்கிற வியாதியும் வறுமையும் நீங்கி நீ சௌக்கிய மடைவதற்குநானொரு உபாயஞ் சொல்லுகிறேன் ஆனாலிப்போ துனக்கு மிகுந்தபசியுண்டா யிருப்பதுபோற் காணுகின்றது அந்தப்பசிதீரஅன்னங்கொடுக்கிறேன் சாப்பிடென்று கோயில் அன்னம் வட்டகையுடன் கொடுக்கவாங்கிப் புசித்துப் பசிதீர்ந்தவுடன் என்தாயே இந்தவியாதிநீங்கத்தக்க வகையெதுவோ அதனைச் சொல்ல வேண்டுமெனக் கோயில் குருக்கள் குமாரத்திபோல் வந்திருக்கும் பார்வதியார் நீசிதம்பரத்திற்குபோய்ச் சபாநாதரைப் பாடினால் இந்தவியாதிநீங்கி சௌக்கியமடையலாம் இதுதான் உபாயமென்று சொல்ல

எனக்குப் பாடத் தெரியாதே நானென்னென்று பாடுவேனென்று சொன்னார்-நீ அதைக் குறித்துயோசிக்க வேண்டியதில்லைசிற்சபைக்கெதிரில் நின்று தரிசிக்கும்போது அங்குதரிசனத்திற்கு வந்திருக்குந் திருக்கூட்டத் தாராலே என்னசொல் உண்டாகின்றதோ அந்தச்சொல்லை முதலாக வைத்துக் கொண்டு பாடத்தொடங்கினால் சபாநாதர் கிருபையினாலே பாடவரக்குண்டா மென்றுசொல்லி உமையவள் ஒருஜோதியாக மறைந்து விட்டாள் அப்படி மறைந்துவிடவே அச்சமுமிகுந்த துயரமுங் கொண்டு என்ஞாபகத்திலே குருக்கள் குமாரத்தியென்றே நினைத் திருந்தேனே உலோக மாதாவாகிய பார்வதியாரென்று தெரிந்துகொள்ளாத பாவியானேனே இவ்வளவெல்லாங் கட்டளையிட்டருளிய என்தாய் தன்னுடைய உண்மையையுந்தெரிவித்து எனக்கு நேரிட்டிருக்கிற வியாதியு மிப்போதோ தீர்த்துவிடலாகாதா சிதம்பரத்துக்குப் போகும்படி கட்டளை யிட்டருள வேண்டுமா ஆனால்திருவுளப்பாங் கெப்படியோ அதுயாரால்றியத்தக்கது ஒருவராலும் அறியத்தக்கதல்லவென்று எண்ணிக்கொண்டு அதுமுதல் நித்திரை செய்யாமல் திருநீலநாயகி சந்நிதிக் கெதிரில் வந்து தோத்திரஞ் செய்துக் கொண்டிருந்தார் அப்படி யிருக்கையில் உதய கால

மானதால் ஸ்தானிகர் முதலானவர்கள் போய்த் திருக்காப்பு நீக்கி உள்ளேசென்று அம்மை சந்நிதியில் நிற்பவரை நோக்கிச் சமீபத்தில் வந்து நீ-இங்கே எப்படி வந்தாய் உன்னை உன்வீட்டார் தேடுகின்றார்களே யென்று வினவத் தான்வந்ததும் தனக்குக்கிடைத்தநன்மையையுஞ் சொல்ல அவர்கள் கேள்விப் பட்டுக் குருககள்வீட்டி லிருந்தவட்டலைக யவரிடத்திலிருப்பதைக்கண்டதுமன்றி அவர் முகத்தில் ஒருதேஜசு விளங்கி யிருப்பதையும் பார்த்து ஆச்சரியமடைந்துஅன்றுமுதல் முன்போல் தாண்டவ னென்று அழைக்க மனம்ஒவ்வாமல் முத்துத் தாண்டவ னென்று உபாசாரமாக அழைக்கத்தொடங்கினார்கள்.

அப்பால் திருநிலைநாயகி உத்தாரப்படி பொழுது விடிந்த வுடனேபுறப்பட்டுச் சிதம்பரத்திற்குப் போனார் அப்படி போனவர் தில்லையெல்லையைக் கண்டமாத்திரத்தில் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து தோத்திரஞ் செய்து உள்ளேபோய் வீதிப்பிர தக்ஷணஞ் செய்து தில்லை மூவாயிரவர் வாசஞ் செய்யும் வீதியையும்வணங்கி ஆலயத்திற்குட் சென்று சிவகங்கையில் ஸ்நானஞ்செய்துநித்தியாநுஷ்டானவிதிகளை முடித்துக் கொண்டு ஈரவுடையுடன் சென்று சந்நிதானத்தில் அஷ்டாங்க பஞ்சாங்கத்துடன் பணிந்து எழுந்து துதிசெய்து அன்பின் மிகுதியாய் மனமுருகிப் புளகமடைந்து ஆனந்தக்கண்ணீர்பெருகும்படி பரவசப்பட்டு நிற்கையில் நடேசமூர்த்தியின் திருவருளால் தரிசனத்திற்கு வந்திருப்பவர்களில் ஒருவாக்குண்டாக அதனைப் பல்லவியாக வைத்துக் கொண்டு ஒருகீர்த்தனம் பாடித் தோத்திரஞ்செய்தார்

அதாவது (பூலோக கயிலாசகிரி சிதம்பரம்) என்றுதோத்திரஞ் செய்வதைக் கேட்டருளிச் சபாநாதர் திருவுளத்திற் களிகூர்ந்துஅவருக்கிருந்த வியாதி யெல்லாம் நீங்கும்படி கடாட்சித்து ஐந்துபொன் பணம் பஞ்சாட்சரப் படியின்மேல் வைத்து எடுத்துக் கொள்ளும்படி கட்டளையிட் டருளினார் அந்தக் கட்டளையை மறுக்கஅஞ்சி பணத்தை யெடுத்துக் கொண்டு தமக்கு நேரிட்டிருந்த தீராப்பிணி தீரும்படி ஆனந்த நடேசமூர்த்தி கடாட்சித் தருளிய திருவருளின் பெருமையை எண்ணி யெண்ணிக் களிப்படைநத பின்பும் பலமுறை அஷ்டாங்க பஞ்சாங்கத் துடன்பணிந்து தோத்திரஞ் செய்து பிரியா விடைபெற்றுக் கொண்டு சீர்காழிக்குப்போய் அன்றுமுதல் தினந்தோறும் சபைக்குவந்து அம்பலவான மூர்த்தியைத் தரிசித்து அவ்விடத்தில் என்னசொல் தம்முடைய செவிக்குக் கேள்வியாகின்றதோ அ

தையே பல்லவியாக வைத்துக் கொண்டு கீர்த்தன மாவதுபதமாவது பாடிச்சிதம்பரேஸ்வரர் கட்டளையிட்டருளுகின்றபணமும்பெற்றுக் கொள்ளுகிறவர்ஒருநாள்சிற்சபைக்கெதிரில்வந்துநிற்கும்போதுசபா நாதர்கட்டளையினால் அங்குதரிசிக்கின்றதொண்டர்கள்யாதொன்றும் பேசாமலிருந்தார்கள் அப்போது(பேசாதேநெஞ்சேயென்று)ஒருகீர்த் தனம்பாடிக் கட்டளைப் பிரகாரம் பஞ்சாட்சரப் படியில்வைத்தபண த்தைப்பெற்றுக் கொண்டு சீர்காழிக்குச் சென்றார் இவ்வாறு நடந்து வருகையில் ஒருநாள் பழையபடி சீர்காழியி லிருந்துபுறப்பட்டுச்சித ம்பர தரிசனத்துக்கு வருகையில் கொள்ளிட மென்னும்நதியில் அதி கப்பிரவாகம் வந்து ஒருவரும் போகக்கூடாமையாக விருக்கவே சபா நாதரைத் தரிசிப்பதற் கில்லையே யென்னும் ஏக்கங்கொண்டு கொள் ளிடக்கரைமேல் நின்று(காணாமல் வீணிலே காலங்கழித் தேனே யெ ன்று) ஒரு கீர்த்தனம் பாடினார் அந்தக் கீர்த்தனத்தை கேட்டருளிச் சபாநாதர் திருவுளத்திற் கிருபைகூர்ந்து பிரவாகம்விலகக் கட்டளை யிட்டருள அந்த நதியைக் கடந்து வருபவர் மனக்களிப்பினால் தரிச னஞ் செய்வேனே யென்று ஒருகீர்த்தனம் பாடினார் பின்புசிற்சபை யில்வந்து சபேசனைக் கண்டவுடன் (கண்டபின் கண்குளிர்ந்தே னெ ன்று ஒருகீர்த்தனம் பாடினார் அதன்பின்பு ஒருநாள்வரும்போது மா ர்க்கத்தில் தம்மைச் சர்ப்பந் தீண்டிட அதற்கு அருமருந் தென்கிற ஒருகீர்த்தனம் பாடினார் பாடியவுடன் விஷமிறங்கிற்று இவ்வாறு ச பாநாதர் பேரில் அநேகங் கீர்த்தனங்களும் பதங்களும்பாடித்தோத் திரஞ் செய்துக் கொண்டிருந்து சபாநாதரது கிருபையினால் அனே கமகத்துவம் விளங்கப்பெற்று கடைசிநாளில் மாணிக்கவாசகர்பேறெ னக்குத் தரவல்லாயோ வறியேன் என்கிற கீர்த்தனம் பாடும்போதுசி ற்சபையில் ஒருஜோதி யுண்டாக அந்தசோதியில் விதேகத்துடன் க லந்துவிட்டார்.

சபாநாதர் துணை

முத்துத்தாண்டவர்-சரித்திரம்

முற்றிற்று

---

உ

சிவமயம்

சபாநாதர்பேரில்.

# முத்துத்தாண்டவர் - பாடியருளிய

## கீர்த்தனம் பதம் இவைகளின் அகராதி.

---


| கீர்த்தனம் | பக்கம | கீர்த்தனம | பக்கம | கீர்த்தனம | பக்கம் |
|---|---|---|---|---|---|
| ஹரஹரசிவசிவ | ௩௨ | கண்டாயோ | ௪௰ | தெருவில் | ௫௨ |
| அப்படி | ௪௯ | கலந்துகொ | ௪௩ | தேடித்திரி | ௪௰ |
| அம்பர | ௰௩ | கனவிலுமற | ௫௧ | தேனார்மொ | ௪௫ |
| அம்பலவாணர் | ௨௨ | கனவுகண் | ௫௩ | தோத்திரஞ் | ௩௯ |
| அருமருந் | ௩௧ | காணமுத்தி | ௩௨ | நடனங்கண் | ௰௨ |
| அவனேதேவ | ௩௫ | காணுமலிரு | ௰௯ | நடிப்பவ | ௨௯ |
| அழைத்துவா | ௪௮ | காணுமல்வீ | ௨௯ | நானேமுழு | ௨௯ |
| ஆசைதீரவே | ௪௮ | கெட்டுப் | ௪௧ | நானேவலி | ௩௮ |
| ஆடிக்கொண் | ௧௮ | சந்ததமுன் | ௰௫ | நிருத்தஞ்செய் | ௨௮ |
| ஆடியபாதா | ௰௯ | சபையில் | ௫௨ | நிர்த்தமிடுந் | ௩௯ |
| ஆடியவேடிக் | ௨௪ | சம்போசங் | ௰௯ | நினைத்துக் | ௫௫ |
| ஆடினதெப்ப | ௰௮ | சரசமிப்படி | ௪௭ | நீதயவாயெ | ௰௩ |
| ஆட்டுக்காலை | ௨௧ | சாமிதரிச | ௨௨ | நேசமேன் | ௫௰ |
| ஆராராசை | ௨௨ | சிதம்பரமே | ௩௮ | பாததரி | ௰௭ |
| ஆநந்தத் | ௨௮ | சித்தரின் | ௰௬ | பிரிந்தாலும் | ௫௫ |
| இனிசுமக்க | ௪௨ | சிவசிதம்பர | ௪௧ | பூலோககயி | ௯ |
| இன்னமொரு | ௰ | சிவந்தபாத | ௩௫ | பேசவுமொ | ௪௬ |
| இன்னம்பிற | ௪௩ | சிவனைமற | ௩௬ | பேசாதே | ௩௭ |
| ஈசனே | ௰௩ | சிற்சபை | ௰௨ | மறவாதிரு | ௩௬ |
| உனைநம்பி | ௰௪ | சுந்தரகுஞ் | ௩௪ | மனதறியா | ௫௭ |
| உன்பாத | ௰௫ | சேவிக்கவேண் | ௰ | மனதினி | ௫௪ |
| எத்தனைத்த | ௫௯ | சொல்லவாரா | ௫௩ | மனமுறு | ௫௮ |
| என்னையென | ௰௪ | தனித்திருக் | ௫௧ | மாணிக்கவா | ௪௪ |
| என்றுசென் | ௩௧ | தீர்த்தமுதன் | ௰௧ | மாயவித்தை | ௨௰ |
| ஏசல் | ௪௯ | தூக்கியபாத | ௩௪ | மையல்மிக | ௫௪ |
| ஏனோவம் | ௫௰ | தெண்டனிட் | ௫௭ | யார்க்குந் | ௩௩ |
| ஐயனேநட | ௨௩ | தெரிசனஞ் | ௩௰ | வருவார்வரு | ௪௫ |
| கண்டபின் | ௩௰ | தெரிசனமே | ௩௮ | வேண்டாமி | ௪௭ |
| கண்டவர்வி | ௰௭ | தெரிசித்தன | ௨௰ | | |


அகராதி- முற்றிற்று

---

உ

சிவமயம்.

சபாநாதர்பேரில்,

# மாரிமுத்தாப்பிள்ளைமுதல்

## சிலவித்துவான்கள்பாடியகீர்த்தநம்

## இவைகளின் அகராதி


| கீர்த்தநம் | பக்கம், | கீர்த்தநம் | பக்கம். |
|---|---|---|---|
| அம்பலத்தாடி | ௭௨ | ஏனிந்தப்பரா | ௭௫ |
| ஆட்டுவெந்த | ௭௭ | ஒருக்கால்சிவசித | ௬௩ |
| இந்தவிடக்கு | ௭௧ | காலைத்தூக்கி | ௬௫ |
| இன்னமுமொரு | ௬௪ | சிவசிதம்பர | ௬௬ |
| இன்னம்வயிர | ௬௯ | தாண்டவம் | ௮௰ |
| உம்மைப்போ | ௬௯ | திருக்கூத்திற்கு | ௭௮ |
| உன்முகம்பா | ௬௬ | தில்லைச்சிதம் | ௫௯ |
| எந்தலத்தை | ௬௧ | தில்லைத்தலம் | ௭௬ |
| எந்நாளுமவாசமா | ௬௧ | தெய்வீகஸ்தல | ௬௰ |
| எங்கோமுமோ | ௭௰ | தெரிசிக்கவேண்டு | ௭௯ |
| என்னகாரிய | ௭௪ | தெரிசித்தபேரைப் | ௫௯ |
| என்னதுணி | ௬௭ | பாரந்தனையடை | ௬௩ |
| என்னபிழை | ௬௮ | பலமந்திரத்திற் | ௬௨ |
| எதுக்கித்தனை | ௭௩ | பாருங்கள் | ௭௩ |
| எதுக்குதவி | ௬௬ | வீடுமம்பலமாகி | ௬௮ |


முற்றிற்று.



உ

சிவமயம்

சிதம்பரம் சபாநாதர்பேரில்

# முத்துத்தாண்டவர்

பாடியருளிய கீர்த்தனம்

---

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ஜம்பைதாளம்

பல்லவி

பூலோககயிலாசகிரிசிதம்பரமல்லாற் புவனத்தில்வேறு முண்டோ

அநுபல்லவி

சாலோகசாமீபசாரூபசாயுச்சிய சபைவாணராநந்தத்
தாண்டவம்புரிவதாற் (பூலோககயி)

சரணங்கள்

க- நாலுமஹமேருவென்னும்நாலுகோபுரநிலையும் - நவரத்நமணி
களாலொளிசித்ரமதில்களும் - மேலுலகையளவிடுதற் போலு
யர்ந்தேவெயில்- விரித்தகம்பத்திரள்களும்
காலுலவுமாயிரக்கான்மணிமண்டபமும- நவகங்கையுநிறைந்த சிவ
கங்கையின்விசாலமும்- ஆலிலையின்மாலுமயனுலுமறியாத- பே
ரம்பலமேவுவோர்க்கற்புதம்புரிதலாற் (பூலோககயி)

உ- வேதமுதலெனுமூலநாதர்தூபியுமேரு-வில்லியார்சிவகாமவல்லி
யார்கோயிலும்- மாதவர்விண்ணவர் முனிவர்தபோதநர்- வித்தி
யாதரர்- மாளிகைகள் குளிகைகளும்

ஏதமொருசற்றுமணுகாத கட்டளைகளுமிரவிபோ- லிலங்குகின்ற
விந்த்ரவிமானங்களுங் காதலுற்றேகண்ட பூதலத்தோ ரெல்லா
ங்காண நூயிரங் கணவேண்டுமென்கையாற் (பூலோக)

௩- மேவார்தொழுந்தில்லை மூவாயிரம் புனிதர்-வீதியுஞ்சைவர்திரு
வீதியுமடங்களுந் - தாவாதபசிதவிர வாவாவெனுஞ்சத்ர-சாலை
யும்பலசோலையும்

பூவாவிகளும்வயலு மோவாமலேபெருகு- பொன்னிநதியுந் தெரு
வும் மன்னியவளங்கண்டு-தேவாரமூவர்முதற்பாவாணரனைவரு
ஞ்-சிவஸ்தலத்தினிலதிகந் தில்லைவனமென்கையாற் (பூலோக)

கீர்த்தனம்-இ-ம-கல்யாணி- ஏகதாளம்

பல்லவி

சேவிக்கவேண்டுமையா-சிதம்பரம்-சேவிக்கவேண்டுமையா

அநுபல்லவி

சேவிக்கவேண்டுஞ் சிதம்பரமூர்த்தியாந்
தேவாதிதேவன் திருசந்நிதிகண்டு(சேவிக்)

சரணங்கள்

௧- காரானைமாமுகத்தைந்துகரந்தானை-கற்பகராயனை முக்குறுணியா
னைச்-சீரார் புலியூர்ப்பதிமேலைவாசல்வாழ்- தேவர்சிறைமீட்குஞ்
சேவற்கொடியானை (சேவிக்க)

௨- சிங்காரமானசிவகங்கையின்மூழ்கிச் - சிவகாமி சந்நிதிமுன்பாக
வேவந்து- பாங்காகவே பிரதட்சணமுஞ்செய்து-பத்தர்கள்சித்
தர்கள்பணிவிடையோர்தொழச் (சேவிக்க)

௩- சிட்டர்பரவுந்திருமூலத்தானைச்- சிற்றம்பலமென்னும் பேரம்
பலத்தானை- அட்டதிக்கும்புகழம்பலவாணனை - ஆண்டவனைத்
தில்லைத்தாண்டவராயனைச் (சேவிக்க)

௪- நல்லதிருவிழாவாணித்திருத்தேரும் - நாடெங்குமேபுகழ்நற்கோ
புரநான்குந்- தில்லைமூவாயிரவர் வளர்வீதியுந்- திருமஞ்சனமு
மார்கழிதரிசனமுஞ் (சேவிக்க) (உ)

கீர்த்தனம்-இ-ம-தோடி-ஏகதாளம்

பல்லவி

இன்னமொருஸ்தல மின்னமொருகோயி
லின்னமொருதெய்வமிப்படியுண்டோ

அநுபல்லவி

பொன்னம்பலத்திலிற் பூமலராயன்
போற்றுஞ்சிதம்பரர் பொற்பதமேயல்லால் (இன்னமொ)

சரணங்கள்

௧– காசிகழுக்குன்றங்காளாஸ்திரிகச்சி- கமலாலயந்திருவண்ணாமலை யுறை-ரகசியமான தெய்வங்கட்கொடுக்கமும்- நடனமு மிங்கே நளினமுமிங்கே (இன்னமொ)

௨– பாலானசந்திர சூரியர்மண்டலம்-பாரிந்திரன்பதி பற்றியமண்டலம்-பூலோகத்திற்குக் கைலாசம்வைகுந்தம்- பிரம்ஹமண்டலத்துப்புதுமையுமிங்கே (இன்னமொ)

௩– கரிசற்பிணிகள்பறந்துபோஞ்சிவ- கங்கையின்மூழ்கிக்கநகசபை வந்து-தெரிசித்தளவினிற்றேவனுமாவன்-தெரிசித்தாரைக்கண்டாற்றேவனுமாவன் (இன்னமொரு) (௩)

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி-ஜம்பைதாளம்

பல்லவி

தீர்த்தமுதல்மூர்த்தியுந்-தலவிசேஷமெங்கள் சிவசிதம்பரத்திற்றானே

அநுபல்லவி

கீர்த்தனஞ்செய்யுமெய்ப் பொருண்மூன்று மொன்றென்று
கேண்மையோடுவேதா கமம்பகருமாகையால் (தீர்த்)

சரணங்கள்

௧– தெரிசித்தபோதந்தபிரமனென்னுளுஞ் செலுத்தும்பாக்கியங்களுண்டாம்-பரிசித்தபோதுலகுபதினாலுமிரட்சிக்கும்பதுமவிழியோனாகலாம்-உருசிக்கும்பானீயுமன்பாகவுட்கொள்ளிலுருத்திரன் பதவிபெறலாம் - வருசிற்பரானந்தத்தீர்த்தமதிலாடவேமஹேசுரனுமேயாகலாம் (தீர்த்)

௨– கல்லுமுதன்மணல்களுந்துகள்களு மிலிங்கமெனக் கருதும்வேதங்களெல்லாந்- தில்லைதனிலுண்டான குளப்படினீரெல்லாஞ் சிவகங்கையென்றுசொல்லலாங்- குல்லைமாற்புகழரிய கூபங்களானந்தக் கூபமென்றேபகரலாம்- வல்லநடராஜர்பதங்காணுமலே தலத்தில் வசித்தவருமுத்திபெறலாம் (தீர்த்த)

௩– சின்னமகிழ்சம்பந்தர்தரிசிக்கயாவருஞ் சிவசரூபமானதிரமும் கதிமுநலித்திரர் மூவாயிரம்புனிதரும் காரருந்தொழுதேத்தவே

வந்துதெரிசித்தவர்க்குமாராதபேரின்பவாழ்வு தருகின்றபதமும்-
கந்தமுருகோதைசிவகாமிபங்கிநடநமிடுகடவுளருள்வடிவாகையால்

கீர்த்தனம்-இ-ம்-நீலாம்புரி-திரிபுடைதாளம்

பல்லவி

சிற்சபைதனிலேகண்டுகொண்டேனென்றும்

அநுபல்லவி

அற்புதக்கூத்தனைநாடி- அவனையெங்குந்தேடி- (சிற்ச)

சரணங்கள்

௧- வையந்தருசிவகாமிமாலைகொன்றை- மாலையெனவணிந்தானை மா
ந்தர்க்குமுன்னாலே- செயும்நாள்வாசனையின்மேலேகடற்றிரையெ
னவேவரும்பிறவிதீரும்வகையாலே (சிற்ச)

௨-அடியவருக்கருள்புரிகுவானைப்பண்டுஅரிபூசைக்குவந்துடன்சக்கர
மளித்தோனைத்- துடியிடையாள்மலைமகள்பங்கோனை- அன்பாய்த்
தொழுதவர்க்குக்கதிகொடுக்குந்தூயவெளியானை (சிற்ச)

௩-தேவர்வான்கோனயன்மாலாதி மெய்ம்மைதிகழ்மூவாயிர - வரில்
நானொருவனென்றநீதி மூவர்பாடற்கருள்நாதி - வந்துமூவுலகுந்
தொழுந்தில்லைதனினடநஞ்செய்ஜோதி (சற்ச)

௪-முனிவர்புரிதவமகிழ்ந்தேயன்றையின்பமுடிவிலா- வருளளித்தமுத
லேநாவென்றுதனியே- நீயறிகவெனவின்றுநின்றகாட்சியைக்கண்
ணுற்கநகசபையருகே நின்று (சிற்ச) (௫)

கீர்த்தனம்-இ-ம்- ஆகிரி-ஆதிதாளம்

பல்லவி

நடநங்கண்டபோதேயென்றன் சடலஞ்செய்தபாக்கியமையா

அநுபல்லவி

விடமணிந்தகண்டாமன்றுண் மேவும்பலவாணாவுன் (நடநங்)

சரணங்கள்

௧- அரியயனுந்தேடிக்காணா வருவாய் நின்றகாரணா- மருமலர்ப்பச
சிலைகொண்டுருகுமன்பர் சிந்தையொன்று (நடநங்)

௨- அன்னைதந்தைநீயேயென்றேயுன்னையேமிகநம்பினேனென்னை
யேநீகாக்கவேண்டுஞ்சொர்ணசபைநடராஜா (நடநங்)

௩- பதஞ்சலிவியாக்கிரமபாதரிதயம் புகுந்தாண்டவனே நிதம்பிரி
யாச்சிவகாமிநேசனே சிதம்பரேசனே. (நடநங்)

கீர்த்தநம்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

பல்லவி.

ஈசனே-கோடிசூரியப்பிரகாசனே- கநகசபை

அநுபல்லவி

வாசனே-யானந்தநடராஜனே (ஈசனே)

சரணங்கள்

௧. அறியேனெஞ்சினேசம்பிறியேன்வருங்கருமங் - குறியேனறி
வில்லாதசிறியேனென்னையாளாய் ஈசனே

௨. நினையேனுனைவேடமும்புனையேன் சிவகங்கையி- னணையேன்
கொடியதீவினையேனுய்யவேயாளாய் ஈசனே

௩. துதியேன்வணங்காவஞ்சமதியேயென்றாலும்சபா - பதியேந
ம்பினேன்சிவகதியே தந்தென்னையாளாய் (ஈசனே) (எ)

கீர்த்தநம்-இ-ம்-சுருட்டி-ஜம்பைதாளம்

பல்லவி.

அம்பரசிதம்பரபரம்பரசதாநந்தவடிகண்மறவாதருளுமநுதினமுமே

அநுபல்லவி

செம்பொன்மலைச்சிலைவளைத்த திவ்வியபரமாநந்தசம்போ
சிவசங்கர-ஸ்ரீதாண்டவநடேசா (அம்பர)

சரணங்கள்

௧. கங்கைமதியரவக்காதிற்குழையசைய-செங்கைமழுத் திடிய
சையச்செய்யசடையசையப்-பொங்குபுலியதளசையப்பொற்பாதச்சி
லம்பசைய-மங்கைசிவகாமவல்லி மகிழ்நடம்புரியும் (அம்பர)

௨. நின்மலநிராலம்ப நிர்க்குணநிரஞ்சந சின்மையாநந்தபரசிற்
குணசொரூபா-வன்மலக்கோணிக்கியருள் வாரியுறவேயெனது- புன்
மையரவுமைக்காணப் பொதுவினடம்புரியும் (அம்பர)

௩. துங்கமறையாகமங்கள் சொன்னவிதிவழுவாமற் - சிங்காரமா
மெங்கள் செய்துதினந்தினமு-மங்காதநீறுபுனைவைதிக மூவாயிரவர்
நங்கோவென்றேபரவ நாளும்நடம்புரியும் (அம்பர) (அ)

கீர்த்தநம்-இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்

பல்லவி.

நீதயவாயென்னையாளா- யிரு-மாதர்பாடுங்கங்காளா

அநுபல்லவி.

தாதகிசூடியதோளா உமை-காதாலாகுஞ்சிதத்தாளா (நீதயவா)

சரணங்கள்

க. ஒலிகடல்விடமுண்டநேயா-சீறுபுலியினதளுடைய தூயா-மெ
லியுமடியவர்சகாயாபதஞ்சலிபுலிபணிநடராயா (நீதயவா)

உ. காலனைவதைசெய்தகாலா புலிப்பாலனையாண்ட சீலா-வேலனை
த்தருமநுகூலா வைந்து கோலனைவென்றதிரிசூலா (நிதய)

௩, மூவர்பரவியவிநோதா திருநாவலூரன்விடுதூதா- யாவருமக
மயினபாதா மகாதேவா கனகசபைநாதா (நிதயா) (௩)

கீர்த்தகம்-இ-ம்-குறிஞ்சி-ஏகதாளம்

பல்லவி.

உனைநம்பினேனையாசரணம்- நாதம்

அநுபல்லவி

புனைசம்போநடராசா புலியூர்வாழீசா உனை

சரணங்கள்

க, இருவர்தம்மிசை கொண்டநாதா இத்தியெனநின்றுநடஞ்செ
யயுமிங்கிதப்பொற்பாதா- திருநாவலூரன் விடுதூதா தில்லைச்சிவகா
மியொருபாகா சிதம்பரநாதா (உனை)

உ, மழுவுமைதரிக்கின்றகையா கொன்றைமலர்மாலைபுனை கின்ற
வடிசுடர்மெய்யா-எழுபுவி துதிக்கின்றதுய்யா அன்பரிடமாயிருந்தின்
பமுடனுறுநமையா (உனை)

௩, நெடியமாலயன் தேடிக்காணு தெங்குநிறைந்த வாவெனும்
வெல்லர்மணிந்திடும்பூணு அடியவர்தொழுந்தமிழ்வாணு தில்லையம்ப
லநடராஜ அம்பலவாணு (உனே) (௰)

கீர்த்தகம்-இ-ம்- ஆனந்தபைரவி-ஏகதாளம

பல்லவி

என்னையெனக்குத்தெரியச்சொல்வாய்தில்லைப்பொன்னம்பலத்தரசே

அநுபல்லவி

அன்னையறியுமறிவதுநீ சற்றுந்தப்பவொண்ணுதிப்போ
சாமிசமயம் (என்னை)

சரணங்கள்

க, பூதமுநானல்ல பொறிபுலநானல்ல ஓதுமனதியொரு நான்கு
ம்நானல்ல போதக்கருவிபுறம்பல்லவுள்ளல்ல வாதமுநானல்லவென்
றுமயங்கும் (என்)

உ, ஒளியல்லவிருளல்ல உடலினிறைவதல்ல வெளிறுகறுப் பல லவிளக்கொத்ததல்ல அளியுமவஸ்தையல்ல வவஸ்தைப் பிரிவதல்ல தெளிவுமறிவுமல்ல தெளியாததல்ல (என்)

௩, பாசமுநானல்ல பசுபதிநானல்ல பேசிலணுவுமல்ல பெரியவு ருவுமல்ல ஈசலிரிலங்கவிலங்குமபொருளல்ல கோசரமேயேகதேசமு நானல்ல (என்)

௪, சேர்ந்துவருவதல்ல சேராதிருப்ப தல்ல ஓர்ந்துகளிப்ப தல்ல வோராதிருப்பதல்ல போந்துவருவதல்லபோராததனியுமல்ல தீர்ந்த வுயிரேதுதில்லைநடேசா (என்னை) (௰க)

கீர்த்தநம்-இ-ம்-பரசு ஆதிதாளம்

பல்லவி.

உன்பாதமேதுணைகிருபை செய்யா-யஞ்ச
லென்பாரெனக்கு வேறில்லைமெய்யா

அநுபல்லவி,

அன்பாகியம்பலத்தாடுமையா அனல்வடிவெனவொளிர்
பனகசயனன்முதலினரனுதினநிறைகனகசபேச (உன்)

சரணங்கள்

க, பலதெய்வமுந்தெய்வ மெனக்கூறியேன் நின்னையல தெனம னத்தி லொன்றையுமறியேன் வலதெள்ளளவுமில்லாச்சிறியேனம ருவியவிருவினையிருளற வருளமரருமுலகருமகிழ்திரு நடராஜா

(உன்பாதமே)

உ, என்னளவினிற்சித்த மிரங்காதோவந்து சொன்ன தெண்ணு தபராமுகமேதோ உன்னுதலுதவுவ தெப்போதோ உடல்வளைபடவ டரடல்வினைகெடவொருமடவரலொடுமிடுநடனவிநோதா

(உன்பாதமே)

௩, இனியவரெவரெனக் கென்குறைதீரா யோகமுநிவோரைவா ழ்வித்தவுபகாரா தனியாம்பேருபெற்றப் புலியூராசயமிகு புயவலிமு யலகனெளியமனியபதமருள்தம-நியசபைநாதா

(உன்பாதமே)

கீர்த்தநம்-இ-ம்-சௌராஷ்டகம் அட்தாளம்.

பல்லவி.

சந்ததமுன்பாதசேவை தந்தென்மேற்கிருபைபாராய்

அநுபல்லவி

செந்திருவுமேவும்புலியூர்வாழ் சிற்சபைநடேசசுவாமி (சந்த)

சரணங்கள்

௧. பண்சிலம்போசையளிக்கப் பாவியேன்வினையொளிக்கக்
கண்களாநந்தந்துளிக்க கண்டென்மனதுட்களிக்கச்-சந்த

௨. சிந்துரம்போர்வையுமாடத் தேவர்கள்நான்மறைபாட
ஐந்தெழுத்துருவம்நாட அணிமலர்தூவிக்கொண்டாடச்-சந்த

௩. பங்கயத்தயன்மால்காணப் பாதனேபொற்பணிபூண
தங்குவில்வாசகிநாண சம்புவேயம்பலவாண(சந்த) (௰௩)

கீர்த்தனம்-இ-ம்-காம்போதி- அடதாளம்

பல்லவி

சித்தரின்னமுண்டோ பூலோகத்திற் சித்தரின்னமுண்டோ

அநுபல்லவி

அத்தர்தில்லைவாழு பம்பலவாண
ராநந்தத்தாண்டவ ராயரல்லாமல்(சித்தரின்)

சரணங்கள்

௧. ஒப்பிடுவித்தைதக ளெப்படியுலகத்தி லுடலேசெப்பாகவுயிரோ
பந்தாகச் செப்பிடுவித்தைகள் விளையாடினபின்பு செப்புமில்லைபந்து
மில்லையென்றருளிக்குஞ் (சித்த)

௨. இதஞ்சொல்லிக்கின்னரர் கிம்புருடர்பாட விடந்தனி லம்பி
கைகண்களிகூடப்பதஞ்சலிவெம்புலியஞ்சலிபண்ணப் பதஞ்சலியாம
ற்பதஞ்சலிபண்ணுஞ் (சித்த)

௩. மாலொடுபிரமனுந் தேடரிதானமலர்ப்பாதங்கண்டுவணங்கித்
தெரிசிக்கச் சாலோகசாமீப சாரூபசாயுச்யந் தந்தருள்தாண்ட
வராயரல்லாமற் (சித்தரின்ன) (௰௪)

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி ஏகதாளம்

பல்லவி

காணமலிருந்தாலென் கலக்கந்தெளியாதே

அநுபல்லவி

பூணாரமரவணிந்த பொன்னம்பலத்தானைக் (காண)

சரணங்கள்

௧. திரிபுரத்தையெரித்தானைச் செங்கையின்மான்தரித்தானைக்
கரியுரித்துப்போர்த்தானைக் கங்கைமுடித்தானை
அரியயனுதித்தானை யஞ்செழுத்தாயுதித்தானை
உருவிலியையெரித்தானை வெள்ளிவெண்ணீற்றானைக்-காண

௨- தலைமாலைதரித்தானை தக்கன்சிரந்துணித்தானை
உலகெலாம்நிறைந்தானை யுவமையில்லாதானை
மலைதனுவாய்வளைத்தானை மறலிவிழவுதைத்தானை
கலைமதியைப்புனைந்தானைக் கண்மூன்றுடையானைக்(காண)

௩- நாலுகோபுரத்தழகும் நன்மதின்மண்டபத்தழகும்
சீலமிகுந்தெருவழகுஞ் சிவகங்கையழகும்
ஆலமிடற்றினிலழகும ஆடும்அம்பலத்தழகும்
பாலின்மொழியுமையழகும் பரமானந்தத்தழகும்(காண)

கீர்த்தனம்-இ-ம்-ஆகிரிராகம்-ஏகதாளம்

பல்லவி.

கண்டவர்விண்டிலரோ யனுதினம் விண்டவர்கண்டிலரே

அநுபல்லவி

கண்டவர்விண்டிலர் விண்டவர்கண்டிலர்
அண்டரண்டங்கடந்த ஆதிசோதிபாதந்(கண்டவர்)

சரணங்கள்

௧- முத்திபத்திசத்திமுப்பால்விளைவதல்ல நெற்றியொற்றுமொரு நிலமைதானுமல்ல தத்தெய்யென்றுதாள மத்தளமதிரவே தித்தியென்று மன்றுளாடுந்திருக்கூத்தை (கண்டவர்)

௨- அந்தக்கரணமொருநான்கு சத்தாதியைந்து மடக்கியறிவுடன் கூடிச்- சந்தித்துநின்றருள் சற்குருவும்போற்றும்- அந்தமதாகியவானந்தநடனத்தைக் (கண்டவர்)

௩- ஒவ்வுதானுமல்ல அவ்வுமிவ்வுமல்ல நவ்வுஞ்சிவ்வுமல்ல நாதநடுவணையிற்- சிவ்வுமவ்வுமல்ல சேர்ந்தவட்டமல்ல- அவ்வுமூவ்வுமல்ல வாதிருக்கூத்தநடநந் (கண்டவர்)

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி.

பாததெரிசனஞ்செய்யும்போதே- செய்த
பாவம்வெருண்டுநிஜபலமானதே

அநுபல்லவி

வேதம்புரவுந்தில்லை மன்றுள்மீதேமெத்த- மிடுக்குள்ளகாளியுந்திடுக்கிடவுலகமும்-நடுக்கிடத்திகுர்திமென்- றடுக்குடனடித்திடும் (பாத)

சரணங்கள்

௧- பத்தியுடனே- பூஜைபண்ணும்பாலன்-தன்னைப்-பற்றிப்பிடிக்க வந்தபாசக்காலன்- தத்திவிழவேயுதைத்தருள்காலன் வெற்றித்

தாண்டவம்புரிந்தென்னை யாண்டவனெனவரு மாண்டவரொ
டும்பையும்பூண்டவர்சிலம்பணி (பாத)

௨- சுந்தரமூர்த்தியார்தமிழுக்காக-வும்பர்-தொழுதிடத்தூதுக்கிசை
ந்தன்பாக- அந்தமின்பரவைக்கு முன்பதாக-வந்த-வரகர சிவ
கிரிகிரிபுரமெரிபட- நகைபுரிவரதர் பரமரகசியமான (பாத)

௩- ஆலவிடமருந்துஞ்சர்வேசன்-கங்கை-பணிந்தவன்மாகயிலைமாம
லைவாசன்-மாலுக்கிளையவுமை மகிழ்நேசன்சதுர் மறைவிரிமுடி
மிசைபுறைபவன்மலகிகர் கறைவிடவரமொடுபிறையையு மணி
பவன் (பாத)

கீர்த்தனம்-இ-ம்-கல்யாணி ஏகதாளம்

பல்லவி

ஆடினதெப்படியோ நடனம்நீராடினதெப்படியோ

அநுபல்லவி

தேடியமெய்ப்பொருளே வளமேவும்சிதம்பரத்தேயொரு
சேவடிதூக்கிநின் (ராடின)

சரணங்கள்

௧- ஒன்றல்லரண்டல்ல ஒன்றிரண்டுமல்ல நன்றல்லதீதல்ல நாத
விந்துமல்ல அன்றல்லவின்றல்ல வாதியந்தமல்ல மன்றுள்மர
கதவல்லிகொண்டாட (ஆடின)

௨- ஆணல்லபெண்ணல்ல வன்றியலியுமல்ல காணரூபமல்லகாணாத
ரூபமல்ல சேணல்லவேயொரு தேவர்களுள்ளேதேவ வானுதற்
பச்சை படிந்தைகொண்டாட (ஆடின)

௩- பூதங்களல்ல புறம்பல்லவுள்ளல்ல வேதங்களாலே விளங்கும்
பொருளல்ல ஆதவன்போலேயசையும்வடிவல்ல மாதுமையாள்
பச்சைவல்லிகொண்டாட (ஆடின)

௪- பஞ்சவர்ணமல்லபஞ்சபூதமுமல்ல நெஞ்சினினைவுமல்ல நினைவி
ற்கனவுமல்ல அஞ்சுமுகமுமல்ல ஆறாதாரமுமல்ல வஞ்சிமரக
தவல்லிகொண்டாட (ஆடின)

கீர்த்தனம்-இ-ம்-மோகனம்-ஏகதாளம்

பல்லவி

ஆடிக்கொண்டாரந்தவேடிக்கைக் காணக்கண் ணாயிரம்வேண்டாமோ

அநுபல்லவி

நாடித்துதிப்பவர் பங்கிலுறைபவர் நம்பர்திருச்செம்
பொன்னம்பலவாணர் (ஆடிக்கொண்)

சரணங்கள்

௧- பங்கயபாதச்சிலம்புசைந்தாடப் பாதச்சதங்கைகள்கிண்கிணெ
ன்றாடப் பொங்கமுடனேயுரித்துத்தரித்த புலித்தோல்சைந்தா
டச் செங்கையிலேந்தியமான்மழுவாடச் செம்பொற்குழைகண்
முயலகனுடக்கங்கையிளம்பிறைச் செஞ்சடையாடக்கனகசபை
தனிலே (ஆடிக்)

௨- ஆரநவமணிமாலைகளாட வாடுமரவம் படம்விரித்தாடச் சீரணி
கொன்றைமலர்தொடையாடச் சிதம்பரத்தோராடபேரணிவே
தியர் தில்லைமூவாயிரம் பேர்களும்பூசித்துக் கொண்டுநின்றாடக்
காரணிகாளியெதிர்த்துநின்றாடக் கநகசபைதனிலே (ஆடிக்)

௩- நிர்த்தகணபதி வேலர்நின்றாட நின்றயன்மாலுட னிந்திரனு
ட முப்பத்துமுக்கோடிதேவருடனே முனிவரும்நின்றாட மெ
ய்ப்பத்திமேவும்பதஞ்சலியாட வியாக்ரமபாதரும்நந்தியுமாடக்
கொப்புற்றகாதான்சிவகாமியம்மையுங் கூடவேநின்றாட (ஆடி)

கீர்த்தநம்-இ-ம்-சௌராஷ்டகம் ஆதிதாளம்.

பல்லவி

சம்போசங்கரமஹாதேவா சதாசிவ சம்போசங்கர மஹாதேவா

அநுபல்லவி

செம்பொற்சபையில் நடஞ்செய்யுஞ்சிதம்பர அரஹரசிவசம்போ

சரணங்கள்

௧- அரிமாநபிரமற்கரியோனே சித்தந்தெளிந்த வன்பர்கள்தமக்கு
ரியோனே-புவனங்களில்- திரியுமுப்புரமெரிசெய்த சச்சிதானந்
தபரஹரஹரசிவ (சம்போ)

௨- அனவரதத்தாண்டவராயாதைலை வெற்பைஅசைத்தவனை ரட்
சித்தநேயா மருவார்கொன்றை - புனலொடுமெதிதும்பை புனையு
ஞ்சிற்பரஹரஹரசிவ (சம்போ)

௩- இருமுனிவர்க் கருளும்நாதா மூவாயிரவ ரொன்றுமர்ச்சனைசெய்
போற்பாதாவெனையாண்டருள் - திரிபுராசிவகாமிதினமும்மரு
வியஹரஹரசிவ (சம்போ)

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை- ஏகதாளம்

பல்லவி.

ஆடியபாதா இருவர் பாடிய நாதா

அநுபல்லவி

நீடியவேதாதில்லை நிர்த்தவினோதா ஆடியபாதா

சரணங்கள்

க- இருமுனிவருமொரு திருப்புனுமருகினில்-உருகியுருகிமனம்ஹரா ஹராவெனவே (ஆடிய)

௨- அந்தர துந்துமி யுந்தடியுந்தவில்திந்திமிதிமிதிமி திந்திமியென வே (ஆடிய)

௩- கும்பமுலையுமையாள் சம்ப்ரமத்தொடுகாண- உம்பர்தொழவரு சிதம்பரமதனில் (ஆடிய)

கீர்த்தனம்-இ-ம-கர்நாடகசாரங்கம்- ஏகதாளம்

பல்லவி.

தெரிசித்தளவின்முத்திபெறலாம்-புலியூரானைத்
தெரிசித்தளவின்முத்திபெறலாம்

அநுபல்லவி

தெரிசித்தளவின்முத்திபெறலாம்-புலியூரானைத்
திகம்பரநடம்புரி சிதம்பரதேவனைத் (தெரி)

சரணங்கள்

க- அரனைமன்மதனைச்சங்கரனைமான்மழுவேந்துங் கரனைச்சடையிற் கங்காதரனைப்- பரனைச்சருவதயாபரனைப்பராதிகம் பரனைத் தில்லையில்வாழ் சிதம்பரனைச்சங்கரனைத் (தெரி)

௨- மாயனையாண்டவுபாயனைமலைமகள் நேயனையழிவில்லாக்காயனை தூயனைவைபோகாயனை நால்வேத வாயனைத்தாண்டவசாயனை ச்சிவாயனைத் (தெரி)

௩- ஈசனையம்பரகேசனையதிகப்பிர காசனைக்கைலாச வாசனைப்- பூசனைசெயுமன்பர் நேசனைத்திரிபுரநாசனைச்சிவகாமிநேசனைச்சபேசனைத் (தெரி)

கீர்த்தனம்- இ-ம-கேதாரகௌளம்- ஏகதாளம்

பல்லவி

மாயவித்தைசெய்கிறானே அம்பலவாணன்மாயவித்தைசெய்கிறானே,

அநுபல்லவி

மாயவித்தைசெய்கிறான் காயமொன்றெடுத்துக்கொண்டு
நேயமாணவெளிதன்னி லுபாயமாய்க்கூட்டத்திருந்து (மாய)

சரணங்கள்

க- உண்டுபண்ணிவைக்கிறான் கொண்டுகொண்டுபோகிறான்
நன்றுக்குந்தீதுக்கும நடுவாயிருக்கிறான்
பண்டுநாலுவெளியெங்கும் பாரெங்குங்காணவொண்ணான்
அண்டர்தொழவம்பலத்திலொண்டிகட்டியாடிக்கொண்டு (மாய)

௨- உண்கிறானுறங்கிறான் உருவாந்தேரோட்டுறான்
சங்கீதத்தைமீட்டுறான் தானேதீபங்காட்டுறான்
மங்கையுடன்கூட்டுறான் மலைக்கக்கண்காட்டுறான்
அங்கலிங்கபீடமாக விங்குமங்குமாயசைந்து (மாய)

௩- கூட்டுறான்வெகுசண்டை மூட்டுறான்தத்துவத்தின்
மாட்டுறானுலகம்பா ராட்டுறான்பின்னையுமோர்
ஆட்டிடையனம்பலத்தி லஞ்சாடுமெய்க்கிறவன்
காட்டுமெய்யிலாறுக்கப்பால் வீட்டிலேகுடியிருந்து (மாய)

௪- மண்ணுமல்லவிண்ணுமல்ல வாய்வுமல்லதெய்வமல்ல
பெண்ணுமல்லவாணுமல்ல பேசாமனின்றவிடம்
ஒண்ணிலிருக்கஞ்சையு மூண்டுபண்ணிக்கொண்டவன்
காண்மாயக்காரனென்றுங் கைக்குள்ளேயுஞ்சிக்காமல் (மாய)

கீர்த்தனம்-இ-ம்- பியாகடை-ஏகதாளம்

பல்லவி

ஆட்டுக்காலைத்தாரும் என்சாமிவாதாட்டுக்காலைத்தாரும்

அநுபல்லவி.

ஆட்டுக்காலைத்தேடி யம்பலவாணரே
காட்டுப்புலியும்பாம்புங் காத்துக்கொண்டிருக்குது (ஆட்டு)

சரணங்கள்

௧- கின்னரர்கிம்புருடராதியர்வீணையர் கெருடகாந்தருவர்சித்த வித்
தியாதரர்-தன்னிகரில்லாததந்திரர்மந்திரர் சரணஞ்சரணமென்றி
ருகைகூப்பிநிற்கப்-பொன்னின்விமானத்தர்சிவிகைவாகனத்தர் பூ
தகணதிபர்போற்றியடிவிரும்ப- அன்னவாகனத்தன்விண்ணிலே
றவாயனாட்டுக்காலைத் தேடிக்கோட்டுப்பன்றியாயினான் (ஆட்டு)

௨-முப்பத்துமுக்கோடிதேவர்குழாங்களும்முனிவரானவரும்ரிஷிகள
னைவோருஞ்-செப்பமானசந்திராதித்தருங்கூடிச் செயசெயென்று
பாதந்தமமைத்தேடுகிறார்கள்- ஒப்பில்லாதகாளியம்பலத்தேநின்று
உன்றன்றாளைக்கண்டுதொந்தோமென்றாடுகிறாள்-மெய்ப்பதாகுமந்
தக்காலையெனக்குத் தந்தால் வேண்டுமறுபத்தஞ்சாம் விளையாட்
டாகுஞ்சாமி (ஆட்டு)

௩-ஆக்கியதிசைவளர்திக்குப்பாலகரு மாதிவைரவரும்நாதரனைவருந்-
தாக்கியதாவரசங்கம்கோடியுஞ் சந்தித்துப் பாதத்தைக் காத்துக்
கொண்டிருக்கவே- பாக்கியஞ்செய்தவன் முயலகனொருகாலைப்பற்
றிமுதுகணையில்வைத்துச்சுமந்துக்கொண்டான் - தூக்கிபொற்று

ளையெனக்குத்தந்தாற் றலைசுமக்குஞ் சுமக்கும் போதும் போதும் போதுஞ்சாமியிக்த (ஆட்டு)

சீர்த்தனம்-இ-ம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி

சாமிதரிசனங்கண்டு சபலமானேனானே

அநுபல்லவி

வாமியொருபாகர்சபைவாணராதிசபையில் (சாமிதரிசனம்)

சரணங்கள்

க- அனுதினமுமடியோர்நம்மடியர்தம்லம்மிணையாதமெனிதணைமீடேத் றவராமருள்வே- தன்னெவெனவேபரதசாஸ்திரவிதிதவராமற்றின முழுமைகாணநடனஞ்செய்தருள்சிற்சபையில் (சாமி)

உ-சேர்மனுயர்நதியரவுதூயதாகியகொன்றைநத் தாமமணியுஞ்செஞ்ச டாபரனார் - பூமன்முதன்முனிவோர்கணேமமாதவருடன் சாமள சொரூபர்பணிவேமசபைதனிலே (சாமி)

ந-தேவாதிதேவருந் தில்லைமூவாயிரவரும்பாவாணர்மூவர்தமிழ்பகர டியவரும் நாவாரவேபுகழ்ந்துபூவாலர்ச்சனைசெய்து காவலென்றே துதிக்குங்கனகசபைதனிலே (சாமி)

கீர்த்தனம்-இ-ம்- கல்யாணி-ஏகதாளம்

பல்லவி

அம்பலவாணர்நீரோ-தென்புலியூ-ரம்பலவாணர்நீரோ

அநுபல்லவி

அம்பலவாணர்நீரோ யண்பூர்க்கன்பானசுவாமி
செம்பொற்கிளிமொழியாள் சிவகாமிநாதர்நீரோ (அம்பல)

சரணங்கள்

க- காலனையுதைத்நீரோ காமனையெரித்நீரோ
வேலனையீன்றீரோ வேதவஸ்துவும்நீரோ (அம்ப)

உ- திரிபுரமெரித்தீரே திங்களைத்தரித்தீரோ
கரியையுரித்தீரே காலகாலரும்நீரோ (அம்ப)

ந- இடைபிங்கலையுநீரோ யேகப்ரம்மமும்நீரோ
விடையின்மேல்வருவீரோ வெட்டவெளியும்நீரோ (அம்ப)

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை- ஏகதாளம்

பல்லவி

ஆராராசைப்படார்-இன்பார்த்துக்-காராராசைப்படார்

அநுபல்லவி

அருள்பாராய் பதந்தாராய் துயர்தீராய் புலியூராய்
நின்பாதத்துக் (காரார்)

சரணங்கள்

க- கனகமேனியன்பனகசயனன்கஞ்சனுடன்பதஞ்சலிபோற்ற-அ
னவரதமுங் கனகசபையுளாடிச் சிவந்தென்னைத்தேடிய பாதத்
துக் (காரார்)

உ- பாவித்தவெங்கனற் போலுற்றவந்தகன் பாசத்தின் மேவியே
நேசிப்பதேதுன்னைச்-சேவித்தவேளையிலேமுத்திபாலிக்குந்தே
வேயென்னையாண்டகோவேநின்பாதத்துக் (காரார்)

ங- அருவரைத் தன்னையொருபதுகையா லசைத்துபலன் கொண்
டெடுத்தராவணன்- ஒருபதுகரம்நெரியவே முன்னொருவிரலூ
ன்றுமருமலர்ப்பாதத்துக் (காரார்)

௪- மூவாயிரவரும்பூவார்மனிதரும் முப்பத்துமுக்கோடி தேவர்மு
னிவரும்தேவாதிதேவனேவாவாவென்றேத்திடும் தேசாசிவகா
மிநேசாநின்பாதத்துக் (காரார்)

கீர்த்தனம்-இ-ம்- பந்துவராளி-ஏகதாளம்

பல்லவி

நானேமுழுதும்நம்பினேன்- கனகசபை- யானேநின்பாதந்தானே

அநுபல்லவி

ஆனேவாகனமாகக்கொண் டோனேபுலியூரானே
அடியேனான்சிறியேன் பிரியாதருள்செய்வாய்(நானே)

சரணங்கள்

க- விடியாமிடியார்பக்கலிற்றமிழ்ப் படியாதருள் செய்யவுங் குடியா
யிருக்குமுன்- அடியாருடனேயென்னைக்கூட்டால் நாட்டாய்கா
ட்டாய் திருநடனம் (நானே)

உ- கனவிலுநனவிலுமனதிலுமுனைநாடிக்- கவிபாடித்துதிசெய்யவு
ந்தினமும்வரந்தானேயருளுன்பதியையெண்ணித்- திருநாள்வ
ருநாளொருநாளுனைக்கண்டு (நானே)

ங- அந்தரிசிவகாமசுந்தரிமணவாளா- வந்தரிதொழுந்தாளா-இந்திரி
டிகுடிகுதிந்மியெனவாடுஞ்சிவனேசிவனேசிவனே துணையென்

தாளகீர்த்தனம்-இ-ம்-கௌளிபந்து-ஏகதாளம்

ப ல் ல வி.

ஐயனேநடனமாடியபொற்பாதா- ஆனந்தக்கயிலாயனே

அநுபல்லவி

ஐய்யனே திருச் சபைதனில்தாண்டவந்

தோ குஜெம்தரி-தாகுதித்திமி- திகுர்தமென்றொரு-பாதந்தூக்கிய-ஐ

சரணங்கள்

௧- கங்கைக்கொடுக்கனிந்த கருணைசாதவ்ளங்கா
அங்கையின்மழுவேந்து மானைபரமலிங்கா
செங்கையார்பதிபங்கி ஞானம்வளர்பிரசங்கா
ஜேகுஜெம்தரி தாகுதித்திமி - திகுர்தமென்றொருபாதந்தூக்கிய

௨- வேழமுகனைப்பெற்ற விமலா நமச்சிவாயா
ஆழிதரித்தகைய ஞானமுகுந்தனேயா
சோழன்கைவெட்டுண்ட தூயா அன்பர்சகாயா
ஜேகுஜெம்தரி தாகுதித்திமி திகுர்தமென்றொருபாதந் தூக்கிய

௩- சித்தஜனுடன்புர மெரித்தபாபநாசா
உத்தண்டசர்வேசா உண்மைமகிழ்ந்திடுநேசா
சத்திமாகாளிமுன் றலைகுனிந்திட வீசித்
தர்குஜெம்தரு தோகுதித்திமி திகுர்தமென்றொருபாதந்தூக்கிய

தாளகீர்த்தனம்-இ-ங-தோடி-சாப்புதாளம்

பல்லவி.

ஆடியபாதங்களைப்பாரீர்-ஐயராடியபாதங்களைப்பாரீர்

அநுபல்லவி

தேடியுமாலயன்காணாதபாதர்- தில்லைமூவாயிரவர்கண்டவதிதர்
நாடொறுமுவார்க்கருளல்குமபிரக்கிபாதர்தம்பரமானசிதம்பரநாதர்

தாகுசேகிண சேகிணங்கிட் தஇங்கத்தோம்திரிகிட
தஇங்கத்தோம்திரிகிட தஇங்கத்தோம்
தாகுசேகிண சேகிணங்கிட தஇங்கத்தோம்
தஇங்கத்தோம்திரிகிட தஇங்கத்தோம்கிடத
தஇங்கத்தோம்கிடத தத்திமித்திமிதெய்தெய்
தஇகத்தோம்கிடத் தத்திமித்திமிதெய்தெய்
தாம்தகுந்தரி தரிகுதிரிகுகுதரிகுஜெம்தரி
தாம்தகுந்தரி தரிகுதிரிகுகு தரிகுஜெம்தரி
தந்ததிந்தந் தந்தணந்தணந்திமி
தந்ததிந்தந் தந்தணந்தணந்திமி
தந்ததிந்திமி தக்கிடத்திக்கிட்த்தக
தந்ததிந்திமி தக்கிடத்திக்கிட்த்தக
தக்கிடிங்கு குடிங்குடிங்குகு

# முத்துத்தாண்டவர்கீர்த்தனம்.

தகணதஜெணுக கதணதஜெணுத
தத்ததிங்கணத்தோம்
திதிங்கணித்தோம் ததிங்கணத்தோமென (ஆடிய)

௧. அதிரும்வாணன்குடமுழவோசைதிசைமுட்ட-உந்தரத்துந்துமி
தமகிலமெல்லாமெட்ட சதுர்முகனிசைகொததங்கருமெற்றுளந்தட்ட
யறிந்தயன்றுதைதூக்கிமத்தளங்கொட்ட

தாகுசேகிண சேகுணங்கிட ததிங்கத்தோம்திரிகிட
ததிங்கத்தோம் திரிகிடததிங்கத்தோம்
தாகுசேகிண சேகிணங்கிட ததிங்கத் தோம்திரிகிட
ததிங்கத்தோம் திரிகிடததிங்கத்தோம்கிடத்
ததிக்கத்தோம்கிடத் தத்திமிதித்திமிதெய்தெய்
ததிங்கத்தோம்கிடத் தத்திமிதித்திமிதெய்தெய்
தாமதகுந்தரி தரிகுதரிகுகுதரிகுஜெம்தரி
தாம்தகுந்தரி த்ரிகுதிரிகுகுதரிகுஜெம்தரி
தந்ததிந்தந் தந்தணந்தணந்திமி
தந்ததிந்தந் தந்தணந்தணந்திமி
தந்ததிந்திமி தக்கிடத்திக்கிடத்தக
தந்ததிந்திமி தக்கிடததிக்கிடத்தக
தத்தடிங்குதடிங்குடிங்குகு

தகணதஜெணுத
தகணத்ஜெணுத
தத்ததிங்கணத்தோம்
ததிங்கணததோம் ததிங்கணத்தோமென (ஆடிய)

௨. விரித்தசெஞ்சடையாட விளங்குகுண்டலமாட மென்னகமான்பூ
வாட மேனியிற்பொடியாடத், தரித்வெண்புலியதள் மருங்கிளிலசைந்தாட
த்தண்டைகிண்கிணியிருதாளிலசைந்தாட

தாகுசேகிணசேகிணங்கிட ததிங்கத்தோம்திரிகட
ததிக்கத்தோம்திரிகிட ததிங்கத்தோம்
தாகுசேகிணசேகிணங்கிட ததிங்கத்தோம்திரிகிட
ததிங்கததோம்திரிகிடத்ததிங்கத்தோம்கிடத
ததிங்கத்தோம்கிடத தத்திமிதித்திமிதெய்தெய்
ததிங்கத்தோம்கிடத தததிமிதித்திமிதெய்தெய்
தாம்தகுந்தரி தரிகு திருகுகுதரிகுதரிகுஜெம்தரி

தாம்தகுங்கரி தரிகு திருகுகு கரிகுஜெம்தரி
தந்ததிநதங் தங்கணங்தணங்திமி
தங்கதிங்தங் தங்தணங்தணங்திமி
தங்கதிங்திமி தக்கிட ததிக்கிடத்தக
தங்ததிங்திமிதக்கிட ததிகிடத்தக
தத்தடிங்கு தடிங்குடிங்குகு
ததண தஜெனுத
ததண தஜெனுத
தத்ததிங்கணத்தோம்
ததிங்கணத்தோம் ததிங்கணத்தோமென (ஆடிய)

௩. நன்மைசேர்த்துப்புருநாரதரிசைபாட நாரதபரமாநந்தத்தமூழ்ந்தியா வரும்கேடத் தமமெய்மறைந்திருமாதவர் கூத்தாட தையலுமைமகிழ் கொண்டுருவிழிக்க

தாதஜெகிணசேகிணக்கிட ததிங்கத்தோம்திரிகிட
ததிங்கத்தோம் திரிகிட ததிங்கத்தோம்
தர்குசேகிணசேகிணக்கிட ததிங்கத்தோம்திரிகிட
ததிங்கத்தோ திரிகிட ததிங்கத்தோம்கிடத
ததிங்கத்தோம்கிடத தத்திமிதித்திமிதெய்தெய்
ததிங்கத்தோம்கிடத தத்திமிதித்திமிதெய்தெய்
தாம்தகுங்தரிகுதிரிகுகுதரிகுஜெம்தரி
தாம்தகுங்தரிகுதரிகுகு தரிகுஜெம்தரி
தந்ததிங்தங்தங் தணங்தணங்திமி
தங்ததிங்தங்தங் தணங்தணங்திமி
தங்ததிங்திமி தக்கிடத திக்கிடத்தக
தங்ததிங்திமி தக்கிடத திக்கிடத்தக
தந்தடிங்கு தடிங்குடிங்குகு
ததணதஜெனுத
ததணதஜெனுத
தத்ததிங்கணத்தோம்
ததிங்கணத்தோம்
ததிங்கணத்தோமென (ஆடிய) (கூயி)

தாளக்கீர்த்தனம்- இம், சங்கராபரணம், ரூபகதாளம்

பல்லவி

நடிப்பவனே-நீர்ச்சபையினின்றுநடிப்பவனே

அநுபல்லவி.

நடிப்பவனேகங்கை முடிப்பவனேமறை
படிப்பவனேவிடம் குடிப்பவனே (நடிப்பவ)

சரணங்கள்.

க. அரியுமயனுமவிண்ணமரர்முனிவரும்னைநிதங்கொண்டிறைஞ்சும்
உருகியுருகியுள் ளொளியுறவெளிவெளியுறுமிடத்தடியர்
துதிசெய

தரிகுதரிகுரு தரிகுதரிகுருதாம் தாமதத்தாம்
திரிகுதிரிகுகு திரிகு திரிகுகுதிம் தீம்திச்தீம்
தரிகுதரிகுருதாம் திரிகுதிரிகுகதீம்
தரிகுதரிகுகு திரிகுதிரிகுகு
தத்தெய்யத்தெய்யத்தரிகிடதககததிங்கணத்தோமென்று நடிப்ப
உ. அண்டசண்டமுமண்டலங்களுமகிழ்ந்துவிசிரபதத்தனத்தொடுங்கணம்
கண்டுளம்நைந்துபோமங்கணைக்கண்ணிமறவனைக்கியினபுற
தங்கதங்கக தங்கதங்கககதாம் தாமதததாம்
திங்கதிங்திகி திங்கதிங்திகி திம் தீம்திததீம்
தங்கதங்கககதாம்
திங்கதிங்கிகிதீம்
தங்ககதக இங்கதிங்திகி
தத்தெய்யத்தெய்யத்
தரிகிடத்தககத்திங்கணத்தோமென்று நடிப்பவனே
ங. பட்டரானவர் சிட்டரானவர் பத்தரானவர்முத்தரானவர்
இட்டமாய்மணிக்கூடமதனிற்கண்டு [illegible] ஞானவிநவிநைவைனிங்கியல்
தககததககதகதகதககதாம் தாம
திகிதகிதிகி திகிததிகிதிகி தீம்திச்தீம்
தககதககக திகிததிகிதிகி தீம
தககதககதகதாம திகிததிகிதிகி தீம்
தககததக்க திகிததிகிதிகி
தத்தத்தெய்யத்தெய்யத்
தரிகிடதககதகத திங்கணத்தோமென்று (நடிப்ப)

மூவடுக்கோலிக்காள-கீர்த்தனம் இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி

திருத்தஞ்செய்தாரே ஐயர்-ஆனந்தத்திருத்தஞ்செய்தாரே ஐயர்

அநுபல்லவி

திருத்தமானமன்றுள் சிவசிதம்பரநாதர்
திக்கிமிகிமி தீமி திக்கிட த்திக்கிட த்திரு
தத்திருதிமிதக திதிங்கிணத்தோமென (திருத்தஞ்)

சரணங்கள்

அருமறையியாலிகதிக்க அர அர அர அர அர அர வெனவே
அடியவர்குழாந்துதிக்க திருநந்துணைமமதிங்கச சிவ சிவ சிவ
சிவசிவசிவ வெனவே சோநதிருமுனிதிதிக்க தரிக்கதோந
தததிமிதரிகிணதத்தித்தா த்தாகதாந்
தத்தணத்தணஜெணுதஜெணுதஜெணுத
ததணத்தண தகததிங்கணததோமென (திருத)
திக்தி மத்தளநாதந் திந்தோந்திந்தோந்தித்தோமென்வே ஜெக
மெங்கணுமோதப் பத்தாஞ்செழுத்தோர்தப்பும்பம்பம்பம்பம்
பம்மென்னவேபாரிருசங்கமுழ
தித்திதோந்திக்திமிதிரிகடதிததித்திந்தீந்
திரிகுகிரிகுகுஜெம்ஜெம்தரி
தரிகுதரிகக தந்கணத்தோமென (திருத்)
தாண்டவத்தைக்கெலிக்கத் தகதகதகதகதகவெனவே தரித்த
ணிம்முழச்சொலிக்க கருஙிணசெண்ணம்பலிக்க கலகலகலகல
கலகலவெனவே காலிற்சதங்கையொலிக்க
தரிகுகுந் தரிதித்தி தரிகிட திததிததோந்தோந்
தகணகடிகுகுகு தட்டக்குடிகுகு
தகணகக்கணதக ததிங்கணததோமென (திருத்) ௬௨

மூவடுக்கொலிக்கீர்த்தனம் இ-ம-கேதாரகௌளை-திரிபுடைதாளம்

பல்லவி

ஆனந்ததாண்டவமாடினார் தில்லையம்பலவாணனார்

அநுபல்லவி

ஆனந்தத்தாண்டவமாடின்ருசிபருள் சிதம்பெறச்சக்கொண்
சிக்குந்தவிப் புஷ்பத்திரசத்தபதத்தில் பொற் திருச்சிற்றம்பல
த்தினின் (ஆனந்ததாண்டவம்)

சரணங்கள்

க பாதச்சிலம்புகலிர்கலீரென்னப் பைம்பொற் குலமுகள் பளீர்பளீரெ
ன்ன வேதபுராணந்தத்தெய்ததெய்தத் தெய்யென்ன விரித்து
செஞ் சடைக்குப்பெண் தரித்துக்குஞ் சரத்தைக்கோன் றுரித்துத்தி
புரத்தைப்புன்சிரிப்பிற் சங்கரித்து நின் (ஆனந்த)

உ மால்கைமத்தள்ந் தணுதணு தணுவென்ன மலரவன் தாளங்கண்
ர்கணீர்கணீரென்னத் சேலவிழிமாதுசபாசபாசபா சென்ன சிறக்க
கிண்கிணிச்சத்தந் தறைக்குட்கிங்கிணுக் கென்று பிறக்கச் சொர்க்க
மட்டுக்குந் திறக்கச்சபைசிறக்க (ஆனந்த)

ங பததர்கள்தேகம்விரீர்விரீர்விரீரென்னப் பதஞ்சலிவியாக்கிரர்ஜெய
ஜெயாஜெயாவென்ன சிததகணங்கள் சிவாசிவாசிவாவென்ன திசை
குச்செதணக்குத் திர்திடுக்குச் செங்வணக்கென்றங்குடுக்கைக்க
புயச்செங்கையடிக்கத்தொனியெடுக்க ஆ

இகுத

கொள்ளடக்கரைமேல்நின்று பாடியது

கீர்த்தனம்-இ-ம்-காம்போதி-ஜம்பைதாளம்

பல்லவி.

காணுமல்வீணிலே காலங்கழித்தோமே

அனுபல்லவி

சேணுடர்போற்றுதில்லைச் சிதம்பரஸ்தலத்தை காணுமல்

சரணங்கள்

க. சேரன்சோழன்பாண்டியனிரண்ணியவன்மன் கோபுரமு
ரவீரப்பவூபன் செய்த்திருமதில்களும், பாருலகும்போற்கின்
ஞ்சாக்ஷாப்படிகளும் ஆரணங்கள்சூழ்ந்ததிருவாயிரக்கால்மண்
மும் காணுமல்

உ. கங்கையும்நிறைந்தசில-கங்கையுடடித்துறையு மங்களகசிவகாமி
வாசல்பணிமண்டபமுந், திங்களனி திருமூறநாதருட்சந்நிதி
பொங்குசெல்வம்போலுயர்ந்த-தங்கப்பேரமபலமுங் காணுமல்

ங. நிர்த்தசபைகனகசபை சிற்சபையின் தெரிசனமும் முத்திபர
மெனவோமுழங்கு ஞ்சின்னத் தொனியும் பத்தர்க்குட்சிறந்த கோவிந்த
ராஜர்சந்நிதிபுசுற்றிலுந் தலங்கரத்த சொர்ணக்கொடிமரங்களும் காணு
மல்

௪. தில்லைமூவாயிரவர் முனிவர்பெருமவீதிகளும, அல்லும்பகலுமளி க்குமன்னதானசிறப்புஞ், சொல்லரியமர்டங்களுஞ்-சோலைகளும்வா விகளும, நல்லதிருக் கூட்டங்களுங்கா லுதெருவீதிகளும் காணும

கீர்த்தநம் ௩-ம், பைரவி-ஆதிதாம்

பல்லவி

தெரிசனஞ்செய்வேனே முத்திகொடுக்குந் திருவம்பலவாணேசனை

அநுபல்லவி

அரிபயனிருவருமறியாதவிமலனை
கரியுரிபோர்த்தநங்கருணைக்கடலைத்தேடி தெரி

சரணங்கள்

௧. செஞ்சடைமதிகங்கையுங்-திருமுகஞ்சிறந்தபங்கயச் செங்கையுஞ்,பஞ் சாட்சரப் படியும்பாதத்தணிசிலம்பும், நெஞ்சாரவேதுதித்துநின் றெனதுகண்ணாரத் தெரி

௨. காளியுடன்வாதனை- யிருமுனிக்குங்காட்சிகொடுத்தநாதனைமாலுட ன்பணிபிரணிப வாமன்றனக்கருள-காலகாலனையன்பர்கருத்திறகு டிகொண்டானைத் தெரி

௩. சிவகாமிபிராணேசனைப்பனையாண்டருள்-தில்லையம்பதியீசனை, அ வனிதொழுந்தயாபரனையென்னையனை- சிவசிதம்பரதேவசிற்றம்பல வாணனைத் தெரி ௩௰

கீர்த்தநம்-௩-ம்,சங்கராபரணம்-ஆதிதாளம்

பல்லவி

கண்டபின்கண்குளிர்ந்தேட்ஜனனக-கடலைக்கனாகடந்தேன்

அநுபல்லவி

அண்டர்பிராணக் கருணாகடாக்ஷனை யம்பலத்தைகண்டோர்க்கருள் யோக்ஷனை, அண்டபகிரண்டமும்படைத்தோனை-யாண்டவனைநித்தியத் தாண்டவக்ராயனைக்
கண்டபின்

சரணங்கள்

௧. அந்திப்பிறைகங்கைசேர்ஞ்சடையனை- யமரர்முனிவர்சிவசிவவெ ன்னவே சநதித்தேயன் புடன்தும்புருநாரதர்சங்கீத் மேபடிக்கவி ந்தைக்கிசைந்த மால்மத்தளம்கொட்டவே-வேதங்கணீரென்றுதா தாவமுழங்கடவ்திந்தோநதிரிகிட தோதிமியென்னவேசிந்தித்துநி ன்றுமும்பர்கள்கோனைக்
கண்

௨ பரவைத்தனவாசலிற்றூதனை வவதனைபத்தர்க்கு முத்தியளித்தி
ங்கர்த்தனைக் காமதிற்சூலகபாலந்தரித்தானைக் கங்காளனைப்பரனை
ராமயமாகப் புரந்தருணுதனை நித்தியகல்யாணனைச் சித்தவிநோ
னைப் பரம்பரமாகிய வாண்டவனைத்திருவைப்பாசொன்பாருக்கருள்மே
ரம்பலத்தானைக கண்

௩ தண்சேல்நல்விழிமாகாளிவாதுக்குத் தாக்களித் தெக்களி சொல்லி
யேரண்டு கண்பனை த்தயெதிர்த் தாடுகின்றான் தலைகவிழ்த்தப்பு
ம்நிற்கவே மண்ணிலொருபாதம் விண்ணிலொருபாதமாக் வேவை
தூர்த்தகடனஞ்செய அண்ணலைக்கண்ணனை யாளுமுக்கண்ணனை யனை
கனைவென்ற கனகதபேசனை கண் ௩

கீர்த்தநம்-இ-ம் மோகனம் ஏகதாளம்

பல்லவி

அருமருந்தொருதனிமருந்தம்பலத்தேகண்டேனே

அனுபல்லவி

திருமருந்துடன்பாகமருந்து தில்லையம்பலத்தாடுமருந்து இருவினை
ளறுக்குமருந்து ஏழையாகிரக்குமருந்து அருமரு

சரணங்கள்

௧ கொன்றைதும்பையணிந்தமருந்து கோர்வைமீதிற்படர்ந்த மருந்து
ன்றுளே நின்றாடுமருந்து மாணிக்கவாசகாகண்டமருந்து

௨ இந்திரானவர்வானவர்தாமுனிருடிகளதமக்கெட்டாமருந்து சந்தி
ர்சூரியர்காணுமருந்து தானேமுளைத்துத்தழைத்தமருந்து

௩ திரித்தித்தியென்றாடுமருந்து தேதாதிமூவர்கள் காணமருந்துகரு
ணைத்திருத்தியிருந்து காலனைக்காலாலுதைத்தமருந்து அருமரு

கீர்த்தனம் இ-ப் புன்னாகவராளி ஆதிதாளம்

பல்லவி

என்றுசென்றுகாண்பேனோ-னைதுகண்குளிர

அனுபல்லவி

மன்றுள்பதஞ்சலி-புலியூர்வாழுஞ்சபாபதியை என்று

சரணங்கள்

௧ புண்டரீகமுகத்தழகும் புன்சிரிப்பினழகும் வண்டுநிறவிழியழகும்
ரிசைதந்தத்தழகும் குண்டலமுஞ்சவுக்கையும் கொப்புகரித்திடு

ழகும் மண்டலமெல்லாம் விளங்குங்கண்ட சரத்தழகும் என்று

௨ மெய்யெல்லாம்வெண்ணீறு விளங்கியவற்புதவழகுங் கைக்கிலேதரித்திருக்குங்கனலும் டமருகமும்பையரவம் பூண்டகையாற் பயந்தீர்க்குமழகும் வையமெல்லாமுய்யவங்கண் வரவீசுங்கையழகும் என்று

௩ குஞ்சிதபாதத்தழகுங்குனித்தவேர்பதத்தழகுங் கஞ்சன்முடிமலையொடுங்கவின்பதக்கத்தழகும் கொஞ்சுமொழி சிவகாமி கூடநிற்குமழகும் நெஞ்சைவிட்டு நீங்காமனிதமுமனங்களிக்க என்றுசென்று காண்பேனெனதுகண்குளிர என்று ௬௮

கீர்த்தநம்-இ-ம்-கல்யாணி ஆதிதாளம்

பல்லவி

காணமுத்திபெறலாமே ஒருதரத்திற்காணமுத்திபெறலாமே

அநுபல்லவி

காணமுத்தி தருந்தில்லைத் தானுவாயிருந்துபஞ்ச பாணனைக் கண்ணாலெரித்த சோணகிரிவல்லவர் புராணசுந்தரர் தமிழ்மூவாணக்கருள்செய்ம்நிர்வாணரெனும்பேரம்பல வாணர்தஞ்சிவந்த பாதங்காணமுத்திபெறலாமே காண

சரணங்கள்

௧ பண்டுவிடனுண்டுநீலக்கண்ட புராரசம்பு மூண்டகத்திருவனுளர் புண்டரீகாசனர் துதிகொண்ட சிவசங்கரபிரசண்டகாலனையுதைத்து நிதண்டனைபுரிநடேசர் புண்டரீகமலர்த்தாளைக் கா

௨ பஞ்சவதனமகேசர்குஞ் சரசருமதாரா வஞ்சிசிவகாமி நேசர்தஞ்சமென்றடைந்தவர்தம்நெஞ்சிலம்பணியொளிர குஞ்சிதத்தாண் மலரை கா

௩ தேடரியதிகழ்பாதமாடரவப் பூணணிந்துவேடனுக் கருளிமூவர்பாடவேமனமகிழ்ந்து நீடியசெஞ்சடையிறுடியகங்கைபுனைந்து கூடியொளிர்நடராசராடியமலர்ப்பதத்தைக் கா ௬௯

கீர்த்தநம்-இ-ம் ஆனந்தபைரவி-ஆதிதாளம்,

பல்லவி.

ஹரஹரசிவநமச்சிவாயா வெங்களம்மைசிவகாமசவுந்தரிநேயா

அனுபல்லவி.

பாவுந்தெரிண்டிரு கண்பிசெல்வஞ்சகாயா - நித்தியபரமசெம்பொற்சமய
த்தினிதம்பரிவாயிருந்து மிதம் பெறவினையா கிருபைதம்பரதேவா
ஆரகரசிவசிவ

சரணங்கள்.

௧. இனமும்பின்னுமோசோதை சேவிக்கவென்று - மிந்தத்தெருச்சனமேமோ
டசபலமெல்லாங்காணும் - நினைவெல்லாமந்த ரூபமாய்க்கிடந்து ம
ன்றும்நித்தம்பலதேவதைகள் - சற்றும்பலவிருந்தாலும் - வெற்றம்ப
லமல்லாதுசிற்றம்பலமாமோ அரகர

௨. யாவாக்குமுயிர்க்குயிராயுறைகின்றயோகபரம் - சகசியமாகவெங்கும் நி
றைந்தாயே - மூவர்க்குமுதல்வனுமசிறந்தாயே - கருணை - முகமதாக
கனகசெண்டமிதியக - தாலாட மருகசர்தேவே அரகர

௩. பாதிமதியணிந்தபரஞ்சோதியென்பாய் பணியுந்தொண்டருக்கோ
லமாநுபூதி - அதிவுமைபதியாகியசீதி - மிகவும்பரமான திகப்பர
ரூபபரம்பரமானசிதம்பரதேவா அரகர

கீர்த்தனம் ௯ - மோகனம் - ஆதிதாளம்

பல்லவி.

பார்க்கத்தெரியுமையா சபாபதிநீ ரடியவிந்தைதானையா

அநுபல்லவி.

தூக்கியபாலா திருகுலமூல் கையிலேந்தித் தம்புருநாரதா கிம்புருடர்
கின்னரா குழப்பொதுவிலன்பா - தாழ்வாடினவிந்தை - பார்க்கத்தெரியு
மையா பார்க்கத்

௧. பாதச்சிலம்புமசையஉமையாளிடப்பாகத்திற்கூடிமேயாசிய வேத
கீதங்களும் கின்னரதமேழுகோந்தி விடைடையைவிட்டிறங்கிசடை
யைவிரித்துக்கொண்டு - வேலைபார்க்குமொருதானைத் தூக்கிக்கொ
ண்ட பார்க்

௨. குண்டைதம்பரணிந்தாலைக - திருச்சடையிற - குளிர்கங்காதேவிகுலு
க்க - பன்னகங்கத்தகதகாட - பாவைக்குத்தாதுமெசன்று - பதுபநல்லமூர்ப்
வதன விழிசுரந்த பாதம்கோசமும் - சமசேலதம் - பாடிக்கொண்ட

 பார்க்.

சபாநாதர்பேரில்பாடிய

திருச்சிற்றம் பலவாழ்வோய - பத்திவலையிற் - செகந்நதித்திடவீழ்வோய் - தரித்திந்திமிதோந்திமி திரிதநித்தித்திந்திமி தகதகதரிகிட - திகிதிகிதிரிகிட - தாத்திமியெனத்திருக்கூத்தாடியவிந்தை

கீர்த்தனம் - இ-ம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்

பல்லவி.

சுந்தரகுஞ்சிதபாதத்திலேகண்டு தொண்டுசெய்வாய்மனமே

அநுபல்லவி T. 16186

சந்ததந்தில்லை சிவகாமிபங்களுர் தானந்தமாகிய
வானந்தநாடகச சுந்தர

சரணங்கள்.

அச்சுதன்முன்னாளிலேனமாகித் தேடுமாக்கன்றலைக ணெருங்கிடச்
சூழ்- மெச்சியோர் பாம்புபுலியுங் கொண்டாடு மேலாஞ்சிதம்பரந்
தன்னினின்றாடுங் சுந்தர

வெஞ்சினத்தேமனுயிரை மடிக்கும் வீட்டின்பந்தந் தெண்ணந்தன்
னை முடிக்கும்-செஞ்சிலம்புங் கிணகிணியும் படிக்குஞ் சிற்றம்பலத்
திலென்னாளுமாடிக்குஞ் சுந்தர

நல்லவர்செம்மை மனத்திவர்போற்றும் நம்புமடியார் பிரவியமாத்
தூங்- பல்லே மூவாயிரர்-பூசைசெய்தேத்தும் திருமால்தன்கண்ணைம
லரெனச்சாற்றுஞ் சுந்தர ௨௨

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்

பல்லவி

தூக்கியபாதத்தி னேக்கொளிகண்டு சும்மாயிருநெஞ்சமே

அநுபல்லவி

தூக்கியபாதத்தைக்கண்டவர்க்கேசித்தி சொன்னேன்சொன்னேன்
னுக்காலுமேவெற்றி-தேக்குங்கருணைச்சிவகாமியேசத்தி தில்லைசித
ம்பரக்கண்டவர்க்கேமுத்தி தூக்கிய

சரணங்கள்

பாக்கியமானபராபரங்காணும் பார்ப்பதெல்லாமதுவாகவேதோணும்
வாக்குமனதுக்கெட்டாததுபூணும்-மன்றாள் - நடனமுனக்குள்ளே சா
ணும் தூக்கிய

பிறப்பிறப்பென்னுந் துயர்போயொழிக்கும் பேரின்பமான்சுகமே
யளிக்கும்-மறப்புநினைப்புமில்லாதெமிளிர்க்கும் - மன்றுடையானரு
ள்கொண்டுதெளிர்க்கும் தூக்கிய

௩ தத்துவமெல்லாந்தலைகடுமோறுக் தானேநாமானவிடக்கண்டுதேறுங்
அத்துவிதப்பொருளாகிய வீறு மானந்தவின்பவமிர்தம்முள்ளூறுங் ௩௩

கீர்த்தனம்-இ ம்-கல்யாணி-ஆதிதாளம்

பல்லவி

சிவந்தபாதத்தைக்காணவேணுமென்றுசிந்தையினிலேமனமே

அனுபல்லவி

தவந்தனக்குப்பயன் தருமோவெனத்தில்லைச்சபையி
னடனமிடுந்தாண்டவராயன்] சிவந்த

சரணங்கள்

௧ அம்பரத்தினின்றமரர்கோன்முனிவர்க்கு மாறுசமயவேதசாஸ்திரந்த
லைவர்க்கும் உம்பருக்குமயரிருடிகட்கு முலகிலுள்ளபேர்சகல
மோமவென்றுடிச் சிவந்த

௨ பதஞ்சலிபகவற்கும் வியாக்கிரபாதற்கும் பலநாளும் நடஞ்செய்பா
தங்காண்பதற்கு நிதமுமவனருளினாலே துதிக்குமன்பர் நினைவிலு
ங் கனவிலும்நின்றுநடம்புரிந்து சிவந்த

௩ காளியுடனேகூடிவாதாடினவிக்கை கண்டதில்லைநகர்தாற்கேட்ட
ண்டிப்போது தூளியுடம்பிற்பூசிமானும்மழுவுமேந்தித் தொங்தோ
மென்றொருகாலைத்தூக்கிநின்றுடிச் சிவந்த

கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி ஆதிதாளம்

பல்லவி

அவனேதேவர்கள்கண்ட னவனேதேவர்கள்தலைவ
னவனேத்தினமுநினை மனமே

அனுபல்லவி

தவனேசர்பணிசிதம்பரராசனெனிருஞ்சிற்சபைநட
ராஜனெனவனே அவனெசனே அவனே

சரணங்கள்

௧ இகலாதியேகனேகனென்றதிகமு மெழிலானஜோதி யெவனே புக
லாதிபூதியான் மாவந்தபாசபரிபூரணமானதேவனே சகலாதி யெல்லா
சரமாகியேநின்ற சமபுநாதனெவனே அகலாதியாருக்காதாரமான
தெய்வ மகாதேவனெவனே வவனேவனே அவனே

௨ உருவாலுமருவாலு முருவருவதினாலு மொளிரும் பிரம்மமெவனோ விரிவாலுமுயர்வாலுமெவ்வுயிர்க்கு முயிராய் விளங்கியமெய்யனெவனோ-ஒருநாலு மறையாலு முடிக் கலைகளினாலு மோதொணாதானெவனோ அரியாலுமயனாலுமடிமுடியறியாத வாதிமுன்னாதியெவனோவவனெவனோ அவனே

௩ பேரான சிரேஷ்டமரிப்பினங்கிடும்பெரியதாணுமெவனோ-நேரானபங்கயன்சிரமதைக்கிள்ளிடும் நிமலனம்பலனெவனோ ஏரான மதனைமுன்னுதலின் விழியினாலெரித்தபகவானெவனோ-சீரானபுலியூரில்சிவகாமி பங்கனாநிர்த்தசபாபதியவனோ-வவனெவனோ அவனேதேவர்கள்

கீர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

பல்லவி

மறவாதிருநெஞ்சமே உனக்கிது பிறவாமருந்தாமே

அனுபல்லவி

நறுமாமலர்ப்பொழில் சூழ்தில்லையம்பல-நாதர்க்குஞ்சிதச் செப்பொற்பாதமிவைப்பொழுதும் மறவா

சரணங்கள்

௧ நிச்சயமாகவேகேளாயஞ்செழுத்துண்டிருக்கும்-நிலையையறிந்துச்சரித்துக்கொண்டு வைச்சவழியேசென்றும் அச்சமறவேகண்டுமன்றுளானந்தநடனமின்றேகண்டுகொண்டும் மறவா

௨ பழையவடியார் திருவடியில் வீழ்ந்தெழுந்து பணிசெய்யவேயவரிரங்கிமனமகிழ்ந்து பிறவாமற்காத்துத் திருவடிநிழலிற் பிச்சாதிருக்கவப்பராசையாய் நீயெப்போதும் மறவாதிரு

௩ தினவாரமுந்திரு மூலத்தானமேசென்று தெரிசனஞ்செய்சிவகாமிசந்நிதிகண்டு அனவரதமுஞ்செம்பொனம்பலத்தாடிய வம்மையப்பர்பொற்றாள்செங்கண்மையாகக்கண்டு மறவா ௪௧

கீர்த்தனம்-இ-ம்-முகாரி ஆதிதாளம்

பல்லவி

சிவனைமறவாதே நினைமனமே-ஒருக்காலுஞ்
சிவனைமறவாதே நினைமனமே

அநுபல்லவி

அண்டபிண்டபடரண்டங்களையுமளித்தாண்டவனைத்
தாண்டவனையம்பலத்தானைச் சிவனே

சரணங்கள்

௧ நடவாதநடக்கைகடந்தாலுங்கூடியடையாத-கொடியகலியரவு தொட
ர்ந்தாலும் படையாளர்சுற்றுமடர்ந்தாலுமாதர் கடை மனை தோறும்
நிதங்காத்துக்கிடந்தாலுஞ் சிவனே

௨ பெணணாசைவந்துபிடித்தாலுநம்மை யெண்ணமலேயொருவ னே
யடித்தாலும் புண்ணாகிமனது துடித்தாலு மோய்ந்து கண்ணாசி
விழுடிக்கால்கள் துடித்தாலுஞ் சிவனே

௩ வாரிபன்றியுறைந்திட்டாலும்பொன்னும் மேருகிரிவீறுபடவிண்ணு
டைபட்டாலும் பாருலகவாழ்வது கெட்டாலும் மூஞ்சயாருமறியாத பழி
யாம்வினைதொட்டாலும் சிவனே

௪ அரிபிரம்மர்பதங்களழிந்தாலு மின்னு மிருசுடருமாறியெதிரேறி
ழிந்தாலும் வருணனும்சின்மாரிபொழிந்தாலும் நானூநதரும வெறி
பகருமறைதவறிமொழிந்தாலுஞ் சிவனே

௫ மருமலர்களணியும்பரனைத் தேவதருவாசிக்கதியின்பந்தருங்குருபர
னை உருவாகிவருந்திகம்பரனை நீலத் திருவுடனேநடன மிடுஞ் சிதம்
பரேஸ்வரனை சிவனே

கீர்த்தனம்-இ-ம்-முகாரி ஆதிதாளம்

பல்லவி

பேசாதே-நெஞ்சமே-பேசாதே

அநுபல்லவி

பேசாதேநெஞ்சேபின்சொல்லிப் பேசியுந்தா னென்னகண்டால்
ஈசர்புலியூரில்வளர்நேசரநுபூதியல்லாற் பேசாதே

சரணங்கள்

௧ சிங்காரயிடபிங்கலைசங்காரவழிபோகாமற் - பொங்கபாகவே நிறுத்தி
யெங்கள் தருராயர்பாத-மேத்திக்கோ-மனதைத்தேற்றிக்கோ - அநு
ளைக்காத்துக்கோ-அஞ்செழுத்தையும்போற்றிக்கோ-நானென்றசத்
தம் பேசா

௨. ஆமையாமையைத்திருப்பையைமூமையெழுத்துள்ளிருத்திஙசோமசேக
ரன்பதத்தை நாமெனக்கருத்துள்வைத்து-நாடிக்கோ - பொருளைத்
தேடிக்கோ-முத்திவழியைக்கூடிக்கோ-ஆனந்தக்கூத்தாடிக்கோநா
னென்றசத்தம பேசா

௩. பட்டிப்பசுக்களைத்துண்டு-கொட்டிலடைத்துக்கொண்டு- எட்டெழு
த்துருவையுண்டு பொட்டெனச்செபத்திற்றிரண்டு பூண்டுக்கோவரு
ருளை-ஈன்றுக்கோ-நமது-ஆண்டவன்தில்லையம்பலத்தாண்டவன் த
ன்னைநீகண்டாற் பேசாதே ௪௮

கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

பல்லவி

சிதம்பரமேநினைமனமே-ஜென்மமீடேறச்
சிதம்பரமேநினைமனமே

அநுபல்லவி

சிதம்பரமேமுத்தி சின்மயமாகிய
பதஞ்சலிபூசித்த பாதனைக்காணச்-சிதம்பரமே

சரணங்கள்

௧. ஆகமவேத புராணவுல்லாச சிவேசமகேச நடேசனைக்காணச்
சிதம்பரமே
௨. தக்கிட திகதி தரிகிடவெனவே-திக்குடனாமிடும் தேவனைக்காணச்
சிதம்
௩. திந்திமிதிமிதி திதிமிதிமியெனவே விந்தைநடனமிடும்-வேதனைக்கா
ணச்
சிதம்
௪. சந்தனலேபனசம்பிரமலாவித- கந்தவசந்தனை - போகனைக்காணச்
சிதம்
௫. பத்தியருட்சிவகாமசவுந்தரி- முத்திதரும்பரா - சத்தியைக்காணச்
சிதம்
௬. தரணிபிலனைவருந்-தமியொடுதுதிசெய்-யிரணியன்ம விநோதனைக்
காணச
சிதம்
௭. தேவர்தொழுந்திரு-மாலயன்தேடு - மூவாயிரர்பூசித்த மூர்த்தியைக்
காணச் சிதம் ௪௯

கீர்த்தனம்-இ-ம்-மங்களகவுசிகை-ஆதிதாளம்

பல்லவி

தெரிசனமேநினைமனமே-சபாநாதர்தெரிசனமேநினைமனமே

அநுபல்லவி.

தெரிசனமேமுத்தி பரிசனமேநித்ய
வரிசைநடப்புரி வாழ்சபைவாணா தெரிசனமே

சரணங்கள்,

க. கஞ்சமலருதயன் கஞ்சவனிதைபதி-கஞ்சநயனன்பணி-கஞ்சமலர்த்
தாள் தெரி

உ. ஆகமத்துட்பொரு-ளாகிநிறைந்தசு -தாகரமகிமை-கோ-ளாகாச
கர் தெரி

ங. கனகாம்பரதர-கநகசடாதர - கனகசுபாகர - கனகசபேசர்தெரிசன
மேநினைமனமே மே

கீர்த்தநம்-இ-ம்-கலியாணி-ஏகதாளம்

பல்லவி

தோத்திரஞ்செய்மனமே உனக்கிதுமாத்திரமுற்பனமே

அநுபல்லவி

காத்தமையாளும் வெண்ணீற்றனைவார்சடை
யாற்றனையானந்தக் கூத்தனையனுதினம் தோத்திரஞ்

சரணங்கள்,

க. ஈசனைக்கன கசபேசனை - ஞானப்பிரகாசனையோர்சொல்லும்வாசனை
ப்பதஞ்சலி,பூசனைசெயுஞ்சருவேசனைககயிலாசவாசனை திருநடராஜ
னையரனைத் தோ

உ. பண்ணையாண்டநஞ்சுண்ணைவாசுகி- நண்ணையக்கினிப்பூணனைமா
தேடுஞ்- சேணனைநிதயகல்யாணனைமுதநிர்- வாணனையம்பல
ணனையரனைத் தோ

ங. வேள்ளைமுண்டகத்தாளனைவீறுங்கங்- காளனைவிபூதித், தூளனைப்
பாம்பணிதோளனையுடியவர்க் - காளனையாதிநாளனையுமைமண
வாளனையரனைத் தோ

கீர்த்தனம்-இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்

பல்லவி

நிர்த்தமிடுந்திருச்சிற்றம்பலவனை நித்தம்நினைமே

அநுபல்லவி,

வித்தைவருமுயர் புத்திவருஞ்செல்வ
மெத்தவருமென்று மொத்துவரும்மன்றுள் நிர்த்த

சரணங்கள்

௧. செந்திருவாலயனிந்திரன் மாதவர்செயயமுனிவர்செய செய்வென்றி டத், தந்திரமாயொருகாலைத் தூக்கிக்காளிமுன் தாகுதோதிமிகிந்தி மிதாவென நிர்த்த

௨. சகலபுவனத்தவரவர்போற்றிடச் சந்திராதித்தர்கள் தாமுந்துதித்தி டச் செகணதோதிமி திமிதத்திமிதிமி திகுததாகுதாகுதிக்கிடதத்தீ யே நிர்த்த

௩. அந்தமுள்ளமாலே சொந்தசவுந்தரியான சிவகாமியம்மை மகிழ்ந்தி டத் தந்ததணு கணதானதானதண திக்குதிக்குடிகு தளங்குதாவென நிர்த்த ௫௨

கீர்த்தனம் இ-ம்-நாகவராளி ஆதிதாளம்

பல்லவி

தேடித்திரியாதேநெஞ்சே தேடித்திரியாதே

அநுபல்லவி

தேடித்திரிந்து திகையாதேநெஞ்சே
சிற்றினபத்தாலே ஜெகமெல்லாமடஞ்சே தேடித்

சரணங்கள்

௧. நாவினன்றவாணவந்தன்னையேநீங்கு நாதாந்தப்பேரொளிதன்னிலே தாக்கு தாக்குமோனமாமந்திரத்துணைமையை நோக்குமுத்திக்குவி த்தாய்முழுமதியாக்கு தேடித்

௨. ஆத்துமஞானிகருமெய்தனிற்கேட்டு அண்டரண்ட பகிரண்டங்கள் விட்டப பேரானவானந்த வெள்ளத்தையெட்டுப் பேச்சிரையற்றவி டந்தனைச்கிட்டு தேடி

௩. போட்டவிடத்திற்பொருள்தனைத்தேடு போதநிஷ்டையுட்புகுந்துநீ யாடு நாட்டமுடன்சற்குருபாதநேதேடு நாலாம்பதத்திலருள்ஞானவீ டு தேடித் ௫௩

கீர்த்தனம்-இ ம்-நாதநாமக்கிரியை ஏகதாளம்

பல்லவி

கண்டாயோமனமே நடேசனைக் கண்டாயோ மனமே

அநுபல்லவி

அண்டமுழுதும்பிரம்ப மென்றுதோன்றலீலை
கொண்டலஸ்துவாய்வந்த புண்டரீகபுரத்தைக் கண்

சரணங்கள்

௧. தொந்திப்புகீக்கினையே மெய்ஞ்ஞானத் தின்சந்திப்புவாங்கினையேசெ ந்துப்பிரளயகன்மமென்றும் பகலிறவா யந்தக்காரணமே யாநந்தக்க டலுருகிக் கண்

௨. சத்துவக்குணம்புகுந்தாய்ராஜஸதம மற்றகுணமிருந்தாய், செத்தக
யிறுதனிற்புற்றுப்பாம் புப்பிரமையுற்றுதெளிந்து மகிழ்பெற்ற
திரளபேரின்பங் கண்

௩. இன்பந்தெளிந்துகண்டாயசேதனவெம்பசி தீர்ந்துககொண்டாய்அ
ன்புக்கினியதோர் சிதம்பரந்தனிலே நடம்புரிந்தருட்ரும்பலவா
ணனேக் கண் ௬௪

கீர்த்தனம்-இ-ம்-சாவேரி-சாப்புதாளம்

பல்லவி

சிவசிதம்பரமே தெரிசிக்கமனமே ஜென்னமில்லைபிதுகிஜமே

அனுபல்லவி

தவசிகட்குநடஞ்செய் சர்வேசசங்கராசிவ
பவநாசபுனித பஞ்சாட்சரரூபர்வாழ் சிவசிதம்

சரணங்கள்,

௧. பரவும்பதஞ்சலி வியாக்கிரபாதரோடும்பாரத்தவர்க்கெல்லாம்பிர்ம
மானந்தமேமூடும், அரியமயனு மயங்கியே தேடுமாதியந்தமில்லா
வமலனின்றாடு சிவ

௨. மங்களவேள்வியுமாதவர்பூசையு மருவியவாகமவேதத்திறேசையுந்
துங்கமத்தள்தாளசங்கீத ஓசையுந் துலங்குமெய்யடியார துதியோ
சையும்வளர் சிவ

௩. வல்லவர்வாசஞ்செய்தில்லையுள்தொண்டு மகிழ்ந்துசெய்வார்பகஞ்
சென்னிமேற்கொண்டு- அல்லும்பகலும்பேரின்பத்தையுண்டுஆன
ந்தநிர்த்தநடேசனைக்கண்டு சிவ ௬௫

கீர்த்தனம்-இ-ம்-முகாரி-சாப்புதாளம்

பல்லவி

கெட்டுப்போகாதேநெஞ்சே அநியாயமாய்க்
கெட்டுப்போகாதேநெஞ்சே

அனுபல்லவி

சிட்டர்தொழுந்தில்லைச் சிதம்பரந்தனில்வாழுஞ்
சிவனேசிவனேசிவனேயென்றுரையாமற் கெட்

சரணங்கள்

௧. ஆசாபாசத்தைத்துர்த்துஉளக்-கதிருலுண்டோசொல்வாத்து, பே
சர்மலனுதினம்பிசைக்கும் வகையைத்தேடிபெருமான்பெருமான்
பெருமானென்றுரையாமற் கெட்டு

௨. விழலுக்குமுத் துலேபோட்டுசும்மா வீணுக்கிறைத்தென்பலன்காட்
டு, பழகப்பழகவெட்டிப் பழமென்றுசிக்குமோபரனேபரனே
பரனேயென்றுரையாமற் கெட்டு

௩. சஞ்சலமேதுனக்கடங்கு குருசாமிபாதம்தணியத்தடங்கு வஞ்சக
மேவேண்டாம் மன்னன்பொன்னம்பல-வரதாவரதாவரதாவென்று
ரையாமல் கெட்டு ௫௬

கீர்த்தனம்-இ-ம-காம்போதி-ஜம்பைதாளம்

பல்லவி

இனிசுமக்கமுடியாதுதேகம் தில்லை

அநுபல்லவி

வனத்துறையுஞ்சிவகாமியுமைபாகா இனிச்

சரணங்கள்,

௧. மலத்திரள்விளைத்தபுழுக்கூடு-துன்ப- வாரிமையம்புலவேடர்வாழும்
பெருங்காடு, சலத்துளியாமேலிந்தவீடு இருமை தன்னைத்தலெனு
ஞ்சன்னநத்தனையெடுத்தும்போடு இனிச்

௨. ஒருநாலுபேர்சுமக்கு மூட்டை-நானொருவனே சுமப்பனிந்தவுடன்
மாராக்கூட்டை மருவிலாப்பழக்காய்க்கோட்டை கன்னவாசலோன்
பதாகியேவரும்பனமுபவீட்டை இனிச்

௩. வருவாதவூரனையுங்காத்தீர் இரண்ணியவன்மனுக்குத்தன் தாகம்வ
வரவேசீர்பார்த்தீர், திருநாளைப்போவானையுஞ்சேர்த்தீர் நாளுஞ்சிவ
சபையிலானந்தத் தெரிசனந்தந்தேற்றீர் இனிச்

௪. வருவதென்றுமலர்க்கொண்மைதாரும்-வந்துவாழாதுவாழுமிந்தமல
மயக்கந்தீரும் இருவருளாமோக்கி என்னைப்பாரும்பார்த்துச்சித்தம
கிழுந்தானந்தத் தெள்மதுவாசேரும் இனிச ௫௭

கீர்த்தனம்-இ-ம-நாதநாமக்கிரியை ஆதிதாளம்

பல்லவி

இன்னம்பிறவாமலையாளாய் கேளாய்

அனுபல்லவி

பொன்னம்பலவாணவாக பூமதனைவென்ற யோகாநிரந்தரமும் ஏமச...
யில்லைபோகா புலியூர்ச்சிவகாமவல்லியுமைபாகா (இன...)

சரணங்கள்

க. காயமேநிலையென்றெண்ணிதீயபாவமேபண்ணி மாயநரகைநண்...
வருந்தவமேமுடியாது பாவஞ்செய்யாமலிருந்த கலவுமொண்...
தவஞ்செய்தாலு மிருந்தஜனனம்போதும (இன்)

உ. தொலையாச்சன்னத்தாலே அலைவாய்த்துரும்புபோல நிலையாச்...
லின்மேலேசின்மன தருளைநாட்டியகலாதகன்மவினைகளை விட்...
டியழிவில்லாதசின்மயவீடுகட்டி (இன்)

௩. நின்னருளினாலேவந்தேன் சந்நிதிதனையடைந்தேன் முன்னம்வினை
யைத் துறந்தேன் மூண்டகடுவுண்ட தூயா வணங்கிணையாண்...
ளும்வெகுநேளா கனகசபைதாண்டவநடராயர் (இன்)

கீர்த்தனம்-இ-ம-ஆகிரி ஆதிதாளம்

பல்லவி

கலந்துகொள்வேனே இனிநான் கலந்துகொள்வேனே

அனுபல்லவி

கலந்துகொள்வேனேதில்லை யம்பலர்தன்னிலே
காரணங்கடந்த பூரணத்துடனே (கலந்)

சரணங்கள்

க. கூற்றுவனுகத தொட்டருமிருமைக் கொடியவினைகளடி யோட...
து சாற்றும்பெரியபுவனமெல்லாங்கொண்டு தானதுவானது...
வாகக் (கலந்து)

உ. கட்டுரைகேளாதவன்மனம் யாள்வைத்த சாவதிற்றங்கியென்...
லாளாயது தொட்டுமெறித்திங்கெணத்தடுப்பாரெவர் ரெவர்செ...
ற்கரிய தோர்நல்லவுறவினர் (கலந்து)

௩. செங்கோட்கடவுட்பதமுயான முஞ்செய்யகமலத் தோன்கை...
வித்தது நங்குருநாதன்குறியும்நிலைத்து நம்பலமான பேர...
சோதியிற் கலந்து (...)

கீர்த்தனம் இம் ஆரபி ஏகதாளம்

பல்லவி.

மாணிக்கவாசகர்மேலிரக்கந்தர வல்லாயேகவறியேன்

அநுபல்லவி

காணிக்கையாகக் கொடுத்தேனுனக்கென்னை
ஆணிப்பொன்னேதில்லை யம்பலவாணா மாணி

சரணங்கள்

௧. நோயும்வறுமையுஞ் சண்டையிடாதே நோக்கரைநோக்காகநோக்கி
விடாதே தாயுந்தருமஞ்சலித்துவிடாதே மந்திரிவையாதேஆயுமி
எம்பிறைசூடிய மூர்த்தியந்துவிதமுத்தி புத்தியளித்துத் தியமறு
மையெதிர்நின்று தள்ளுஞ்சிற்சபைமந்திரசிதம்பரதேவர்

௨. கட்டிலைவிட்டுக்கிடத்துமென்னாதே காலைக்கரங்களைகட்டு மென்னா
தேகொட்டிமுழக்கிட்டு கூகூவென்னாதே கோரணி கொள்ளாதே
யெட்டியொருவர்புலம்பிவாராதே எழைப்பிணத்தை யெடுமொன்றி
டாதேசிட்டர்தொழுந்திருசட்டளை மேவுஞ் சிதம்பர தேவாதிருநட
யா மாணிக்கவாசகர்

௩. கட்டை யின்மேல்வைத்துச் சுட்டுவிடாதே கள்ளக்குழியிற் புதைத்
துவிடாதே பட்டுமெபணியுந்தரித்தயலோர்வந்து பால்தெளிக்குத்தா
தே சிட்டியொருவர்சடங்குசெய்யாதே கேட்டவரெல்லாங்கிடைக்க
ததருமென்னச் சிட்டிப்பவன்பனுசிற்சபை மேவுஞ் சின்மயரூபா
சிதம்பரநாதா (மாணிக்கவாசகா)

௪. அப்பருமலிங்கத் தடைந்தனரென்று மாரூரர்வெண்கரி யேறினரெ
ன்றுஞ் செப்பரியதிருஞானசம்பந்தர் தேகுடன்சென்றாரென்றும் இப்ப
டியென்னையலைத்துவிடாதே எம்மானிருந்தபடியேவிருந்திடச் செப்
பலருவீர்நட்டமபுரிமேவுஞ் சிதம்பரதேவா சிவகாமிநேயா (மாணிக்க)

௫. சிற்பரசற்பரமெய்ப்பொருளுங்கண்ட சித்தரெல்லாரும் நிறைந்து
தெரிசிக்கத் தற்பதமாம் காலாஞ்சத்தினிபாதமுஞ் சாயுச்சியமும்
பெறவே பொறபூமாரியிமையோர்சொரிந்திடப்பொன்னூசலாடுந்
திருவாதிரைநாளிற் கர்ப்பூரதீபம்போலென்றனுடலைக் கனகசபை
யிமகலந்துகொள்வாயே (மாணிக்கவாசகர்)

முத்துத்தாண்டவர்

சபாநாதர்பேரில்பாடிய கீர்த்தனம்

முற்றிற்று.

---

ஆக-கீர்த்தனம்-௬௰.

உ

சிவமயம்.

சபாநாதர் துணை.

# முத்துத்தாண்டவர்பதம்.

பதம்-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்

பல்லவி

வருவார்வருவாரென்றென் மனதைத்தேற்றுவாரல்லால்
வந்தாரென்பாரைக் காண்கிலேன்

அனுபல்ல்வி

தெருவிற்கும்வாசற்குந் திரிவார்சகிமாரெல்லாந்
தில்லாபுரீசர்முன்போய் நில்லாரென்காதல்சொல்வார் (வரு)

சரணங்கள்

க. நிலவிலுல்ாவச்சொல்வார் சலவைப்பன்னீரிறைப்பார் கலவிக்குவே
ளேயென்பார் மலர்மெத்தையிதுவெ ன்பார் சல்மோவிதுசினேகப்பல
மோ நானேதுசெய்ய உலகாளுந்தில்லையீச ருலவியென்னை யணைய

உ. நமறியோ சாமிதாமதஞ்செய்வாரோ நீமயங்காதேயென்று பூமலே
ற்றவருவார் காமனூர்வந்தாலென்ன பூமலர்வாடுமுன்னே ஏமசபேச
ரென்முன் (வரு)

ங. கங்கைசடையிலாடச் செங்கையிற் றுடியாடப் பங்கயமெனுங் கை
கொள் மங்கையர்கள்கொண்டாளநங்கைசிவகாமி கொங்கைசேர்புய
மாட செங்கைவீசியாடச் சதங்கைபாதத்திலாட (வரு)

பதம்-இ-ம்-நாதநாமக்கிரியை ஏகதாளம்

பல்லவி

தேனார்மொழிமானாள் தன்னைச் -சேர் மயல்திரீர்

அனுபல்லவி

மானார்கானேயம்பலவாணாபணிபூணா (தேனார்மொழி)

சரணங்கள்

க அளகமதுசரியமுகமலர்வளை நெரியக் களபமுலைபுளகமெழக் கலவி செய்யத்தருணம் வளமைபெறுமகருமாலிகை மார்பாகதி ரூபாகள மாவிடஆறுதில்லைக்கனகசபைவாறு (தேனா)

உ அன்னைதான் வசைபேசவே துணையானமாதருமே சவே கன்னன் மாமதனெய்யவே மலர்க்கணையிற்கனிகணந் தொய்யவே என்னதான செய்வாள் சொல்வீர்மயலெளிதல்லவேவில்லீர் மன்னுசுந்தரா தூதா தில்லைமன்றனாடியபாதா (தேனா)

௩ சந்தனஞ்சுடுமென்பள்மனந் தகைத்தால்பதையென்பள் அந்தியுந்த ணலென்பளொரு வல்லுநாறுகமென்பள் கொந்தரர் கொன்றைத் தாமா நறுங்கோதையம்பிகைவாமா இந்திரன்திருமால யன்றெழு மீசாநடராசா (தேனார்மொழி)

பதம்-இ-ம-ஆஷாடகன்னடம் -ஏகதாளம்

பல்லவி

பேசவுமொண்ணுதே கேர்பமேதோ தெனபுலியூர்

அநுபல்லவி

நசரேயுங்குநாகாதோ (பேசவுமொண்)

சரணங்கள்

க வருந்தினுளைக்கவுமாச்சோ உம்முடன் பொருந்தாதவென்னைசே ர்ந்தா சேர்ந்தா லேசச்சோ இருந்தவிடமெல்லாபவள் பேச்சோ அ வள்கையின் மருந்துதான்றலைக்கேறிப்போச்சோ பேச

உ மாதவர்வசையாலேமனம்நோமோ - வென்னைதகள்ள நீதமோபெ ண்பழி வீணேபோமோ, காதலரியாதவா நீர்தாமே-சுந்தரனார்-தூத ரேயிப்படிசெய்யலாமோ பேச

௩ கொந்தலர்மலியிற் சேர்ந்திரோ சேர்ந்தணைந்து-சந்ததம்நீங்காமயல்ற ந்திரோ, அந்தமின்னார்தம்மைமினைந்திரே-சிவகாமி சுந்தரிபாகரேமத ந்திரோ (பேசவும்)(௩)

பதம்-இ-ப-கலியாணி-அடதாளம்

பல்லவி

அப்படி யெப்படி, செய்ததற்கொப்பினேன் - தப்பிதமோ தில்லைதாண்ட

அநுபல்லவி.

பொற்படியேகொடுத் தெப்படியாகிலும்
மெப்புடன்வந்தென்னை யொம்புடன்கூடநீர் அப்படி

சரணங்கள்

க வாலையிலேசகதச் சேலையிலே முத்துமாலையிலே பொன்னூலையிலே
செப்த வேலையிலேயந்தி மாலையிலேதென்னஞ் சோலையிலே காம
லீலையிலேநீர் அப்படி

உ மேடையிலேமலர் சூடையிலேவிளை யாடையிலேயுற வாடையிலே. நீ
ராடையிலே யென்னைக் கூடையிலேமுத் தாடையிலேகை போ
டையிலேநீர் அப்படி

ரு நாளையிலே யென்னையாளையிலே சொந்தககாளயிலேறிய வாளையி
லே, யிந்தவேளையிலே நல்லநாளையிலேகர்ப்பக் கோளையிலேயாசை
மிளையிலே-நீர் அப்படி ச

பதம்-இ-ம்-கல்யாணி-ஏகதாளம்

பல்லவி

சரசமிப்படிசெய்யலாமோ- சாமிநீர்-சரசமிப்படிசெய்யலாமோ

அநுபல்லவி

வுரிசைபெறும்விநோதா வளர்சிதம்பரநாதரே சரச

சரணங்கள்

க ஸ்தனத்திலேகையைப்போடுநீர் மூகத்திலேமுத்தம்காடுநீர்
தலையிலேமலர்சூடுநீர் தழுவியேவிளையாடுநீர் சரச

உ மானமுறுமெங்கள்குலத்திலே மாசவர்வருபின்பலத்திலே
ஞானமுறுஞ்சிவஸ்தலததிலே நாகரீகபொன்னம்பலத்திலே

ரு வேதந்துதித்துடும்நாதரே மிகுந்திடும்கீர்த்தியாதரே
ஓதவருந்தில்லைவாதரே யுயர்சுதம்பரநாதரே சரச ரு

பதம்-இ-ப்-சாவேரி-திரிபுடைதாளம்.

பல்லவீ.

வேண்டாமிதெல்லாங்காரியமல்ல-தீண்டாதேநில்லும்

அநுபல்லவி,

வேண்டாமிதெல்லாங்காரியமல்ல தீண்டாதேநில்லுஞ் சால்தபர்கண்
டால், ஆண்டவரென்னும்பப்பார் தில்லைத்தாண்டவராயரே

சரணங்கள்

க இராவிலேவந்தென்னை மல்லிகைப் பூவினாலேயெறிந்துசருவித்
தாவுமடியைப்பிடித்துப்பண்ணுகை சரசமேபண்ணுறீர்
கோவிலில்லாதவூரோவையோ பாவியேன்பக்ஷம்யார்சொல்
வார்கள்-சேவிலேறும்நீதரே திருத்தில்லைநாதரே (வேண்)

உ ஆறுமில்லாவிடத்திற்பிடித்தாற் சேருவாளென்றுபார்க்கிறீர்
அந்தத்-தாருகாவனத்துமாதர்போலல்ல சமர்த்திநானையா
ஊருமுலகுமறியச்சேலை தாருமிரவும்பகலும்வீட்டில்
வாருங்கூடியிணையிலாதுசெம்பொன் மன்றுளீசரே (வேண்)

ந இன்னாரினியாரெனறெண்ணாமல் முன்னாளிறவாயிருந்தவரைப்
போற்பின்னாலேவந்துதழுவினாற்கண்ட பேரென்னசொல்வார்,
சொன்னாலுஞ்சற்றுமறிகிறீரில்லைமுன்னாலிருந்தவர் வருகிறார்பா
ரும் பொன்னாடர்பணி+பில்லைவாசரேபுலியூரீசரே (வேண்) கூ

பதம்-இ-ம-நீலாம்புரி-ஜம்பைதாளம்

பல்லவி

அழைத்துவாபோடியடிமானே யின்பம

T.16186

அநுபல்லவி

தழைத்தபுலியூரிற்றாண்டவரைத்தாமே (அழைத்து)

சரணங்கள்

க அன்னநடைமின்னே யேனிவ்வண்ண மென்னையன்னே யென்றும்
பார்உன்றன்தன்மம் சொன்னேனொன்றுவார்த்தைகன்மம
நாலுங்கழுறநீவமறவாத ஜென்மமென்னஜென்மம் (அழை)

உ செம்பொன்மலரின்பமுடன்சூடியுயர் செயபவளவாயிலிசைபா
டிக்கும்பதிமன்னுமிருதனத்தைநாடி யென்னைக்கூடியவர்போனவி
டந்தேடியுறவாடி (அழை)

ந தில்லைவனத்தனி யிருக்குமீசர்-எங்கள்-சிவகாமிவல்லியுடன்பிரியாத
நேசர், அல்லலறுத்தாண்டவர் பிரகாசர் இப்போது அன்னமேநீ
சொன்னால்வருவான்பிரசன்னேசர் (அழை) எ

பதம்-இ-ம்-எ துகுலகாம்போதி ஆதிதாளம்

பல்லவி

ஆசைதீரவேயென்னை-இணைந்தாலொணாதோ

அநுபல்லவி.

பூசைபுரியுந்தில்லை ஈசாசபைநடேசா (ஆசை)

சரணங்கள்.

க. சந்திரனைக்கண்டுநீல மந்தரங்கமானதுபோல் எந்தன்மீதிற்பட்
சம்மைவைத்துவந்தாலொண்ணுதோ - கந்தர்ப்பன்கைபுஷ்பபாண
மந்திநேரமேவருமே தந்திரமோசெய்வதெல்லா மந்திரசபைந
டேசா (ஆசை)

உ. தேடியவல்லவன்பேடு கூடிமருவாதிருந்தா னீடியவுலகிற்பே
டோடிநின்றுய்யுமோ - நாடியேவந்தவென்மேல் மோடிசெய்ய
லாகுமோ பாடியகின்னரர்போற்ற வாடியசபைநடேசா (ஆசை)

ங. கருமேகங்கண்டுமயி லொருமைப்படுலீலைபோற் கிரிசனமுடன்
சேர்தல்பெருமையதல்லவோ - திருவுளமகிழ்ந்தென்னை மருவ
ணைமீதினிற் சுருதிபுகழுந்தில்லைக் கனகசபைநடேசா (ஆசை)

ஏசல்-பதம்-இ-ம்-சௌராஷ்டிரம்-ஏகதாளம்.

பல்லவி.

க. திருமுத்துப்பந்தலின்கீழ் சுருதிப்பயன்முதலோர்
இருபக்கத்தொழுவேவரும் இவரார்சொல்லன்னே
ஒருபத்தன்செயுந்தவத்தை கருதிதிருத்தங்காட்ட
வருகிறபேரம்பல வாணர்காண்மின்னே

உ. வடகயிலைதனின்மூன்று சுடருமுதித்ததுபோல்
இடபமிசையேறிவரு மிவரார்சொல்லன்னே
கடல்கடையும்போதெழுந்த விடமமுதுசெயுநேசர்
நடனபராதிபரர் தில்லை நாயகர்காண்மின்னே

ங. சுரரொனுமூவாயிரவர் திரளுமுனிவருஞ்சூழ
இரதமிசையேறிவரு மிவரார்சொல்லன்னே
சரமதராஜனுமூன்று புரமுமெரிபடமுனிந்த
பரமசிவகாமிவல்லி பங்கர்காண்மின்னே

ச. கந்தருவரிசைபாட தந்திரநான்மறைமுழங்க
இந்திரவிமானத்தில்வரு மிவரார்சொல்லன்னே
அந்திவடிவினர்தொண்டர் புந்தியில்வாழ்பவர்வால
சந்திரசேகரானந்தத் தாண்டவர்காண்மின்னே (கூ)

பதம்-இ-ம்-செளராஷ்டிரம்-அடதாளம்.

பல்லவி.

நேசமேன்பூசலே ஞைசயேன்பேசுநீர்
நேசமேன்பூசலே ஞைசயேன்பேசுநீர்

அநுபல்லவி.

வாசன்சேர்தில்லைநட      ராஜரோமுந்தவும்மை
மோசஞ்செய்தாளேயந்த      ரோஷம்போதாதோ(நேச)

சரணங்கள்.

க. வாடியென்றனைமுத்தர      வாடிமுகவிச்சைகள்
பாடியவள்மேற்சிந்து      பாடிக்கொள்வீரல்லாற்
போடியென்றபேச்சைப்போடீர் முன்னமுமபேய்க்கூத்
தாடியென்பதுமெய்க்க      வாடியபாதரே(நேச)

உ. கொம்பனையாள்குதிரைக்      கொம்புரண்டானையொரு
கம்பஞ்சேர்த்தீர் சோத்த      கம்புகன்றிடக்கண்டீர்
அம்பலவாணரேவூ      ரம்பலேனுமக்கிப்போ
யென்போலுமேயொருத்தி      யின்பஞ்செய்வாளோ(நேச)

ங. பூண்டவாசையானேசம்      பூண்டபோதேயெனக்கு
வேண்டாதவளைத்தீண்ட      வேண்டாமென்றேனே
ஆண்டாரோநீரொனைப்பெண்      டாண்டாற்றலைக்குமேலே
தாண்டவாநீரோதில்லைத்      தாண்டவராயரே(நேச) (ம)

பதம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஏகதாளம்.

பல்லவி

நானேவலியவந்தேனே கோபம்

அநுபல்லவி.

ஏனேவம்பலத்துறை வானேதுய்யோனே

சரணங்கள்.

க. நினதுமனதின்வன்மங்கண்டு-நெஞ்சி-னினையாதெல்லா நினைந்து
நின்றதுவண்டு - கனதனமெனுமுலைசண்டுகெல்ல காணிக்கை
யெனவலங்காரமாகக்கொண்டு      (நானே)

உ. தூரேதுமில்லையேயென்மீது-வீணே-தூறுசொல்லிப் பிரிந்துவ
ந்ததேசூது - வேறேயொருவளைத் தூதுபோகவிடுத்தாற் நீரா
தென்றுவேண்டியிப்போது      (நானே)

௩. தில்லையம்பலத்திலாடிநின்ற சிவனேநீர்வாராத சேதியைநாடி
முல்லையமளிமேற் கூடிக்கொண்ட மோகத்தையுன்னி முயங்க
வேதேடி (நானே) (௰௧)

பதம்-இ-ம்-நீலாம்புரி-ஜம்பைதாளம்.

பல்லவி.

கனவிலுமறப்பதில்லைமானே-நாளுங்

அநுபல்லவி.

கனகசபையிலாடுங் கடவுள்பதந்தானே (கன)

சரணங்கள்.

௧. ஒன்றாகநின்றசுந்தரமும் மூவுலகுக்குயிர்க் குயிராகியேயுணர்த்
தும்விசித்திரமுங் - குன்றாதருளளிக்குந்திரமு மென்னைக்கூடி
விளையாடியவுபாயதந்திரமுங் (கன)

௨. இனபவெள்ளத்தழுத்துமிங்கிதமுங்கிர்பை யெங்கெங்குந்தானு
யிருந்திலகுஞ்சதமும - அம்பரத்திலாடியபொற்பதமும புஷ்ப
வணைமீதிலெனையணைந்தவனுபோகவிதமுங் (கன)

௩. பரமகல்யாணசர்வேசர் யெங்கள் பார்வதியெனுஞ்சிவகாமிபிரா
ணேசர் - கருணைசந்திரசேகரவிலாசம்நாளுங் கனகசபையிலன
வரதமும்நடேசர் (கன) (௰௨)

பதம்-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

தனித்திருக்கப்போகாதுமானே தில்லை

அநுபல்லவி.

வனத்துநடராஜர்தம்மைமருவாமனுனே (தனி)

சரணங்கள்.

௧. காமன்பெருங்கழையைவளைத் தெய்யப்-பூர்ண
கலைநிறைந்தமாமதியுந் தழல்மாரிபெய்யச்
சாமமெல்லாங்குயிற்கூவி வையவென்
றலையிலெழுத்தோவிதென்றெண்ணி மனம்நையத்(தனி)

௨. இரவோர்யுகமாகுதெங்கே செல்வேனினி
யென்றறத்துப்பெண்கட்கிதை யேதென்றுசொல்வேன்
கரவிலெய்யுமதனை யென்றுவெல்வேன்-வீறு
காதல்வெள்ளந்தீர்ந்தென்று கலந்தணைந்துபுல்வேன்(தனி)

௩௰ திங்கள்கங்கையரவணியும் வேணி-புலியூர்ச்
சிவகாமிவல்லியிடப் பாகமாக்காணீ
செங்கமலப்பதத்தின் மனைமூணி-நறுந்
தேனூகமழும்பூங்கொன்றைத் தொடையுதனைக்கேணீ (தனி)

பதம்-இ-ம-கல்யாணி-அடதாளசாப்பு.

பல்லவி.

சபையில்வந்தெதிர்நில்லடி அவனைக்கிட்டித்
தழுவவுன்னாமல்லவு

அநுபல்லவி.

உபசரிப்பேனசொல்லடி அம்பலவாணருளவரிந்தெனை வெல்லடி
பதினமெனறனக்குச் சொற்பமாய்வந்ததிப்போ
அபிநயம்பிடித்துக்கொண் டலைந்துநீதிரிகிருய் (சபை)

சரணங்கள்.

௧. வழக்கமொன்றறியாயோடி நாலுபேர்சொன்னவார்த்தையுங்கு
றியாயோடி - இழுக்குக்குச்சிரியாயோடி தினவெடுத்தாலிடம்
பார்த்துச்சொரியாயோடி - உழக்கிற்கிழக்குமேற்கென் றண்டா
க்குகிருய்த்தேடி - மழைக்கொதுங்கிமனைக்கு வழக்கிடுகிருய்
வடி (சபை)

௨. தெருவிற்பெண்களைக்கூட்டுருய் ஒளித்திருந்துதிருடக்கன்னக்
கோல்தீட்டுருய் - கருதித்திருகல்மூட்டுருய் விரித்துனதுகடி
னத்தொண்டையைக்காட்டுருய் - பெருமைக்கொருசரிகைப் பு
டவையிரவல்வாங்கித் தரமரியாதுடுத்தித்தசுக்குகின்ற சித்தி
ராங்கி (சபை)

௩. இடக்குத்தொழில்மறக்குமோ அடியுனக்கு இனிமேற்குணம்பி
றக்குமோ - எடுத்தவடிசிரக்குமோ உன்னிடத்தினிலின்பநயம்
பிறக்குமோ - மூடுக்காயம்பலத்தானை முயங்குவேனுனென்று
திடுக்கிட்டுவருமெச்சத் தென்பாய்ச்சொல்கிருய்நன்று (சபை)

பதம்-இ-ம-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

திருநீல்வாராளே எனைச்சற்றே திரும்பிப்பாராளே

அநுபல்லவி.

உருவிலியொடுதிரிபுரத்தையு மூடனெரிசெய்தநடனராசன் (தெ)

சரணங்கள்.

௧. வாசல்முன்னில்லானே-யெனக்கொரு - வாசகஞ்சொல்லானே
நேசமாய்ப்புல்லேனே-கஜமுகவைத்த-ராஜனைவெல்லேனே -தே
சிகனம்பலவாணனடம்புரிதேவாதிதேவன்சிதம்பரநாதன்(தெ)

௨. போதுபோவதில்லையே - யெனக்கொரு - தூதுசொல்வாரில்லை
யே - ஈதறிந்தேனில்லையே - யென்மேற்குற்ற - மேதொன்றுமி
ல்லையே - வேதனுமாலுமூவாயிரருந்திரள் விண்ணவருந்தொழ
வாடியபாதன் (தெருவில்)

௩. யெய்யென்றிருந்தேனே யவரிடசைகையறிந்தேனே - மையல்
தணிந்தேனேபசந்திடுமெய்யுங்குளிர்ந்தேனே - வையகமுய்யப்
பதஞ்சலிபோற்றிட வாழுங்கனகசபைநடராஜன் (தெருவில்)

பதம்-இ-ம்-குறிஞ்சி-ஆதிதாளம்

பல்லவி.

கனவுகண்டெழுந்திருந்தேன்-மானே-தில்லை

அநுபல்லவி.

அனவரதநடராஜர்க் கன்புசெய்யமானே (கனவு)

சரணங்கள்.

௧. தெருவினிற்பவனிவந்திடவும்கண்டு தெரிசித்தளவிலென்றன்
சீவன்வாதைப்படவும் - ஒருகிளியைத்தூதுபோகவிடவுமாசை
யுள்ளத்திலடங்காமலோடிப்போய்த்தொடவும் (கனவு)

௨. கண்டவுடனவர்மீதில்விழவும் வாசங்கமழ்கொன்றை மாலைதனி
ற்காதலுற்றழவும் - புண்டரீகபாதத்தைத்தொழவும் கொங்கை
பூரிக்கவுடைதாழப்புரத்தாரிகழவும் (கனவு)

௩. அங்கசன்சமர்செய்ததறவுமெத்த வாராப்பேராசையென்னேர
முந்துறவுஞ் - செங்கமலவணைமீதுரவுந் திருத்தில்லைத்தாண்ட
வனைச்சேர்ந்தின்பம்பெறவும் (கனவு) (௰௬)

பதம்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

பல்லவி.

சொல்லவாராய்-சேதி-சொல்லவாராய்

அநுபல்லவி.

சொல்லவாராய்சேதி சுந்தரமாமின்னே
தில்லைநடராஜனென்னைச் சேர்ந்தமாமையல் (சொல்)

சரணங்கள்.

௧. அடுத்தடுத்தேவந்தே யந்தரங்கம்பாராட்டி
துடுக்காகமோடிசெய்தார சொல்வதேதுமானே (சொல்)

௨. அசையாகினுலென்ன வதிர்ஷ்டமுன்னிலேவேணும்
பேசவுமறியாத பெண்பேதையானடி (சொல்)

௩. இருவருமொருமித் திருந்தசுகங்களெல்லாம்
ஒருவரறிவாரோ வூரில்லுமலாகுதே (சொல்)

சபாபதிசாமி பங்கர்சந்திரசேகரர்
செம்பொன்னம்பலவாணர்சேர்ந்தணைந்தமையல்(சொல்)(௰௭)

பதம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

மையல்மிகவுமிஞ்சுதே சுவாமிநீரிப்போ
மருவாதிருந்தாலென்செய்வேன்

அநுபல்லவி.

வையகம்புகழ்தில்லைவனநாதரோயென்சாமி-மருமலர்மெத்தைமீதிலிரு
வருமாயிருந்து-சருவிச்சருள்கொடுத்துமருவிமுத்துமுத்தாட (மை)

சரணங்கள்.

௧. வரிக்குயிலேழிசைகூவத்தென்றலுந்தாவமன்மதன்மலர்க்கணை
தூவ உருக்குமதிதனிலே யுலைவாய்மெழுகதுபோல் உருகுதெ
ன்றனுள்ம் பரவசமாயுடலம்-வருகுதுகாமவெள்ளம் பெருகுது
வரவர (மையல்)

௨. களபகஸ்தூரிகள்பூசத் தேவரீருடன்கலந்திங்கிதமொழிகள்பே
ச-அளகமலர்கள்வீசவணைதனிலேயிருந்து அந்தரங்கமாகியெங்
தனுளமறிந்து-சிந்தைமகிழ்ந்துநீரிக்காளிற்சேரவரவர (மை)

௩. தில்லைமூதூரில்வாசரோமூவாயிரவர் தினந்தினந்தொழுமீசரே
கல்விசிவகாமிமகிழுஞ்சபேசரோ மூதவர்பணியும்பொற்பாதரோ
தமிழ்க்கொருநீதரோயென்பிராணநாதரோவரவர (மையல்)

பதம்-இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்

பல்லவி.

மனதினிற்றயவானுற் றினந்தினமிப்படி வருமோவராதே

அநுபல்லவி.

தனதுக்குறைவுண்டோலென்கிறீர் தேவர்சித்த
மெனதுபாக்கியந்தில்லைக்கனகசபேசரோ (மன)

௧. உருமத்துக்கமலம்போற்றிருமுகம்புலர்வானேனுருமனதாயி ருந்தால் பெருமூச்சுவருவானேன் - அருமந்தமனதுதான்தெரு வெங்குமுலவுதே பெருமைக்குத்தழுவுவதுரிமையோசாமி ()

௨. எவர்மோசந்தனில்வீழ்ந்தெவர்மயமானாலுங் கவரியின்காற்றை ப்போற்றுவளவேண்டாமோ - அவரவரிச்சைவைத்தா நவரச ருசிபோல நவபலங்காணுமன்றோசிவகாமிபிராணேசரே (மன)

௩. தயவானாலடிக்கடிசுயமாவரவேணும் பிரியாவார்த்தைபேசினாற் செயலாவதேது - அயலாகவெனைத்தள்ள நியாயமோதேவர்கு மயலார்க்குஞ்சரியே நன்னயசபைவாணா (மன) (௰௯)

பதம்-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்

பல்லவி.

நினைத்துக்கொண்டால் சகிக்கப்போமோ தனக்குத்தானே
நிகராகியசாமி செய்விந்தையை

அநுபல்லவி.

அனைத்துலகுந்துதிக்கு மம்பலவாணனொன்ற
னந்தரங்கமறிந்தேதந்தவின்பசுகத்தை (நினைத்து)

சரணங்கள்.

௧. வெடித்தமல்லிகைமுல்லை முடித்தேன்குழலைசிவி
மடுத்தசுருள்தந்திதழ் கடித்தசம்பிரமலீலை (நினைத்)

௨. முடியைநெருடிநெஞ்சை உலைமெழுகாயுருகிக்
கலைநெகிழ்த்தியமிர்த நிலைசோதித்தவிதத்தை (நினைத்)

௩. முத்துஸ்தனத்தின்மேற் கையைவைத்துநகம்பதித்துச்
சித்திரமஞ்சத்திருத்தி முத்துமுத்தாடினதை (நினைத்)

௪. நாமரூபமொன்றில்லாச் சோமசேகரர்சிவ
காமசுந்தரிமகி ழேமசபேசரின்பம் (நினைத்) (௨௰)

பதம்-இ-ம்-நீலாம்புரி-ஜம்பைதாளம்

பல்லவி.

பிரிந்தாலுமறக்கிறதில்லை பெண்ணேநடனம்

அநுபல்லவி.

புரிந்தாரம்பலவாணர் பூவனையின்கண்ணே பிரிந்தாலு

சரணங்கள்.

க. சந்தனகஸ்தூரிவகைபூசிமெத்த சரசவிங்கிதலீலைச்சுரதமொழி
பேசி - சந்தகமணைந்தால்வெகுவாசியிரவிற் றனித்திருக்கும்பெ
ண்ஜென்மந்தானென்னசிசீ (பிரிந்தாலு)

உ. ஸ்தனத்தின்மீதிலழுந்தவைத்து நகத்தைக்கொஞ்சி முகத்தின்
முகம்வைத்துக்குறிபடுத்திய - தரத்தைகலைநெகிழ்த்தியுறவாடு
ம்விதத்தைநாளும் கலவியநுராகமனுபவித்திருந்தசுகத்தைப்()

ங. தென்கைலையம்பதியின்வாசர் நாளும் சிவகாமவல்லியுடன்பிரி
யாதநேசர் - என்கவலைதீர்க்குஞ்சருவேசர் எங்குமிணையொரு
வரில்லாதநாசர் நடராஜர் (பிரிந்தாலு) (உக)

பதம்-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்

பல்லவி.

எத்தனைத்தவஞ்செய்தாரோமானே- தில்லை
ஈசருனைப்புணரத்தானே

அநுபல்லவி.

கர்த்தனெனத்தெரியப் பொன்னம்பலத்திலாடுங்
காரணபூரண வாரணமானவர் (எத்)

சரணங்கள்.

க. கொக்கிறகைச்சூடுவாருக்கிப்போது கொழுந்தும்வேருமுண்டா
ச்சே, மேலும்-அக்கரவம்பூண்டமார்பர்தமக்கு ரத்நஹாரமுமு
ண்டாச்சே. அங்கத்-தக்கனென்னும்மாமன்றலையரிந்தார்க்கு
த் தாக்ஷண்ணியமுண்டாச்சே. சற்றும் - வெட்கமில்லாதிருவா
ணிக்குப் பட்டாடைமெத்தவுமுண்டாச்சே-யென்னம்மா (எத்)

உ. ஒருத்தருமில்லாத பரதேசிக்கிப்போ துலகெல்லாமுறவாச்சே
பெரு-முருத்திராக்ஷவடஞ்சூடுன் சடைக்கிப்போதுயர் பொன்
துராவாச்சே. கையில்-தரித்தமான்கூச்சலைக் கேட்டவருக்கிப்
போது சங்கீதமுண்டாச்சே. புரம்-சிரித்தெரித்தவருக்குச் செ
கரக்ஷகனெனும் திருநாமமுண்டாச்சே-யென்னம்மா (எத்)

ங. யானைத்தோலும் புலித்தோலுமுடுத்தார்க்கு ஆடைத்திரளாச்
சே. உயர் - வானத்தினம்புலி சூடினார்க்கிப்போது மணிமுடியு
ண்டாச்சே. மது-பானத்தைமுன்னுள் சுமந்தார்க்குச் சைவப்ப
ழமெனப்பேராச்சே. பெண்கள்-மானத்தைப் போக்கினார்க் கா
சாவினனுமொரு மாபட்டமு முண்டாச்சே-யென்னம்மா (எத்)

௪. மாட்டிலேறித்திரிவாருக்குவேண்டியவாகனமுண்டாச்சே, தலை
ஓட்டிலிரந்தே குடிப்பாருக்கிப்போ துயர்பாத்திரமாச்சே, ஒரு
வீட்டிற்குடியிருந்தேயறியாருக்கு விண்தோய்மதிலாச்சே, சுடு
காட்டிலாடுவார்க்குத் தில்லையென்றேயொரு காணியுமுண்டா
ச்சே-யென்னம்மா (எத்தனை) (௨௨)

பதம்-இ-ம்-யமுனாகல்யாணி-ஆதிதாளம்

பல்லவி.

தெண்டனிட்டேனென்றுசொல்வீர் நடேசர்க்குநான்
தெண்டனிட்டேனென்றுசொல்வீர்

அநுபல்லவி.

அண்டமெல்லாம்பரவுங் கொண்டல்கால்கள்கும்பிட்டே
ஞண்டவரெனுந்தில்லைத் தாண்டவராயர்முன்போய்த் (தெ)

சரணங்கள்.

௧. பொருந்துங்காதல்கொண்டு பொன்னிதழ்த்தேனுண்டு
இருந்தோஞ்சொல்லவோவிண்டு ஏகாந்தத்தனிற்கண்டு (தெ)

௨. கண்டால்வருமப்பேச்சு கன்னிவயதிலேச்சு
பண்டுசொன்னதும்போச்சு பார்வையவன்மேலாச்சு (தெ)

௩. மன்னுமநாணம்போக்கி மனதைத்தாண்மலர்க்காக்கிச்
சென்னிமேற்கரந்தூக்கித் தில்லைப்பதியைநோக்கித் (தெ) (௨௩)

பதம்-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி.

மனதறியாமல்மையல்கொண்டேன் கொண்ட
மையலுக்கென்னபலன் கண்டேன்

அநுபல்லவி.

தினமும்கிருபைபுரியும் நேசர்-தில்லைச்
சிவகாமிமகிழ்ந்திடுந் திருநடராஜர் (மனதறி)

சரணங்கள்.

௧. மனதில்தாய்க்குவெறுப்பாச்சே யினி வரவரநிஷ்டூரப்பேச்சே,
நினைத்துக்கொண்டாற் பெருமூச்சே பருவ நேரிழையார்க்கி
தெல்லாமேச்சே (மனதறி)

௨. மதிகாய்வதென்னகொடுமையோ மாரன் மலர்க்கணையெய்ய நா
றுகையோ, சதிக்குயில்கூவுது பொய்யோ நிமிஷந்தானாறுயுக
மாகுதையோ (மனதறி)

அ

௩. துதிசெய்துசொன்ன தொருகோடி செய்த சுகலீலைதன்னைமிக நாடி, அதிவிதமாகக்கவிபாடி தில்லையம்பலவாணரை நான் கூடி (மனதறி)

பதம்-இ-ம்-நாதநாமக்கிரியை-துருவதாளம்

பல்லவி.

மனமுருகுது விழிபுனல்பூணுது மையல்பெருகுதுமதியனல்மூளுது
வருமுருவிலிசர மென்னை நீண்டிது வகையென்னசெய்வேன்

அநுபல்லவி.

அனவரதமுமதிவிதத்தாண்டவ மாரவுமபுலிமுனிதெரிசித்திடும்
ஹரஹரசிவசிவ வென்னையாண்டருளம்பலவாணா (மனமுரு)

சரணங்கள்.

௧. தலமீதொருதாயேன்தந்தை தமரேன்மைந்தர்தாமேன் மலரேன் சந்தனமேன் புனுகேன் மையல் சாஸ்வதமே, கலைசோருது வளைசோருது நல்ல கைசோருது மெய்சோருது கனஸ்தனம் சோருது பணிசோருது நெறிமுடி சோருதையோ, இல்லையோ கிருபைநீவந்தென்னை யணையிலையோ இனிநிரந்தர மந்திரமில்லையோ இனியுயிர்விடுவேன் பழியெய்துவதினியே (மன)

௨. விரகாக்கினிமேனியி லெழுகுது வேண்டாம் வேழமுண்டகனி போல், ஒருராத்திரி நாலுகமாய்விழி யுறங்கேனுறங்கேன், அருளாற்றினம் பணிவதுமுனையே அருளாற்றெழுதிடுவது முனையே அறிவேனறியேன் கருணாகர தென்புலியூர்ச் சிவகாமசவுந்தரிபாகாவுன் கருணைகடாட்சமே புரிகுவாய் கனகசபேசா ()

௩. தவசம்பவி தருணகுணந்தரு தகுதிந்திமிதிமி யெனநின்றொரு சுவதம்பெறத் திருநடனம்புரி தருசங்கரனே, நவசந்திர நுதல் வேல்விழிதரு நவசிந்தையிலுருகி யிதம்பெற நவபஞ்சணையதனின் மகிழ்ந்தெனை நண்பிலணைந்தாள், சிவசங்கர திரிசூலாதர திரியம்பக திரிலோகநாயகா திரிபுண்டரஹர மகாதேவதேவராயமூர்த்தி (மன) (௨௫)

முத்துத்தாண்டவர் சபாநாதர்பேரில் பாடிய

பதம்—முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

# சபாநாதர் பேரில்

## தில்லைவிடங்கன்

# மாரிமுத்தாப்பிள்ளை பாடிய கீர்த்தனம்.

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி.

தில்லைச்சிதம்பரமே-அல்லாமல்-வேறில்லைச்சுதந்தரமே

அநுபல்லவி.

சொல்லுகளிதுநெஞ்சே சொல்லுவாய்சிவகாம
வல்லிகன்புளசபை வாணன்வீற்றிருக்கும் (தில்லை)

சரணங்கள்.

க. தோற்றுமும்மலவேரைக் காற்றிலிடுபஞ்சாகத் தூற்றியொழித்
துக்குரை யாற்றிமயக்கந்தீரத் - தேற்றியனேயுந்திரு நீற்றினுலி
ருவினை மாற்றிப்பரகதியி லேற்றிவைப்பதற்கு (தில்லை)

உ. தத்துவநிலைதெரிந் தொத்தமனதோடிருகைத்தலமெதிரேகுவி
த்தேமுடிமீதில் - வைத்தபிறகுபய பத்தியுடனே தெரிசித்த
பொழுதிலுயர் முத்திதந்தாளத் (தில்லை)

ந. காசினிதனிற்கயிலாச ரென்றொருநட ராஜரிருந்து பாவநாசஞ்
செய்வதிதுவே - வாசஞ்செய்வோருக்கு மோசம்வராது இலே
சம்வராதெம பாசம்வராது (தில்லை) (க)

கீர்த்தனம்-இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்

பல்லவி.

தெரிசித்தப்பேரைப் பரிசுத்தராக்கச் சிதம்பரமன்றியுண்டோ

அநுபல்லவி.

விரிவுற்றபூலோக கயிலையென்றுளவொரு மித்துநடந்தெதிர்கொ
ண்டு - மேரு-வொத்தவிரண்டோடிரண்டு கோபுரத்தைக்கண்ணு
ரவேகண்டு (தெரிசித்த)

சரணங்கள்.

௧. மேலைத்திசைக்கோபு ரத்தினிற்கற்பக வேழமுகன்றனை வாழ்த்
தி - நல்ல-நீலத்திருமயி லேறுங்குமரனமுன் நின்றுதொழுதடி
போற்றி - அனு கூலச்சிவகங்கை மூழ்கியந்நீரையுட் கொண்டு
மனக்குறையாற்றி - இந்த-ஞாலத்தையீன்ற சிவகாமசுந்தரி பா
லுற்றிருவினைமாற்றி - வெகு-சிலத்துடன்மலர்சாத்தி அர்த்தசா
மத்திலேதொழுதேத்தி (தெரி)

௨. நம்பித்திருமூலஸ் தானத்திலேதுதி சாத்தமும்பேறப்பயின்று-
உமை-அம்பிகைத்தாளைப் பணிந்துமலாதியோ டைந்துபுலாதி
யைவென்று - நித-மும்பர்வணங்கும்பே ரம்பலத்தானைக்கண்டு
ண்மையாய்ச்சேவித்தகன்று - கள்ள-வெம்பிறவிப்பிணிவேரை
ப்பொடிசெய்யுஞ் செம்பொற்சபைநாடிச்சென்று - கொடிக்கம
பத்தருகினில்நின்றுகையால் கும்பிட்டரகராவென்று (தெரி)

௩. ஞானசபைதன்னைச் சேவித்தங்குள்ள ரகசியவுண்மையைநாடி
யொளி-யானத்தையற்புத ஞானக்கண்ணா லறிந்தானந்த வாரி
யிலாடித் - தவ-மோனத்துடனங்கிருந்து செபங்கண்முழுதுஞ்
செபித்தன்பினீடி - நாளும்-வானத்தவர்க்குங் கிடையாதமுத்தி
நிதானத்திற்சேவடிதேடி - மெய்த்-தியானத்திலதுபாடியக்கிர
னத்தைவேரறச்சாடித் (தெரி) (௨)

கீர்த்தனம்-இ-ம்-பூரிகல்யாணி-ஏகதாளம்

பல்லவி.

தெய்வீகஸ்தலமிந்தத்தில்லை-இந்த-வைபோகமெங்கெங்குமில்லை

அநுபல்லவி.

துய்யவேதனுமாலுந் தேடியேகாணச் செய்யற்கரைத் தாளாலாடி
யேநின்ற - ன் மயனிருந்துவாசஞ்செய்யுந் தென்கயிலாசமாமே யிணை
சொல்லப்போமோ வொருவராலே (தெய்வீக)

சரணங்கள்.

௧. மதிலாயெழுந்துபஞ்சாட்சரமே-சுற்றி-வளைந்துதிருப்பதுஞ்சித
ம்பரமே - போலாஞ் சதுர்வேதநாலுங் கோபுரமேயாகிச்சமை
ந்துநிற்பதுநிலவரமே - யிது-வதனையெத்தலத்தையும் வெல்லு
மே யுலகபதினாலு மிதைத்தானே சொல்லுமே - யார்க்குங்-கதி
தந்தவிதத்தாலே பதியொன்றை யிதைப்போலே காணேனுண்
டென்று வீணைசொல்லக்கூடுமோ (தெய்)

உ. மூர்த்தியுந்தீர்த்தமுந்தலமும்மூன்று முக்கியமுமொருமித்தல
முங் கண்ணுற்பார்த்தவர்க் குண்டோசஞ்சலமும் நினைவின்படி
யேவந் தெய்துஞ்சகலமும் வேத-சாஸ்திரமு மிதைத்தானே
யோதுமேநிமிஷந் தோத்திரமாயுரைத்தாலும் போதுமே யிதி
லோர்மாத்திரை யாமபோது வீற்றிருந்தாற்றீது வருமோபிறவி
யைத் தருமோசற்றுந்தராது (தெய்)

ங. எப்போதும்மங்கலந்தருவதுவே யிது-வெல்லாச்சமயத்துக்கும்பெ
துவே, யிதற்-கொப்பான தலமினியிதுவே விராட்டுள்ளக் கமல
த்தானமிதுவே, வச்சிரக்-கொப்பாருங் குழைச்சியோர் பாகனு
ர்காலந் தப்பாதவரா றபிஷேகனுர், தமக்-கொப்பாந்தலந்தமது
மெய்ப்பானதலமிதுவுண்மை யிதிலுள்ளவண்மை யின்னமன
ந்தம் (தெய்) (ங)

கீர்த்தனம்-இ-ம் தேவகாந்தாரி-ஆதிதாளம்

பல்லவி.

எந்தத்தலத்தையுமிந்தத்தலத்துக்கிணைசொல்லக்கூடாதே-ஐயன்

அநுபல்லவி.

சொந்தத்தலஞ்சிதம்பரமென்று மனதினிற்சிந்தித்துகருமலேடோலே
எதிர்வந்திட்டமுயலகன்மேலே ஆனந்தக்கூத்தாடினத்தாலே (எந்)

சரணங்கள்.

க. ஆதியில்வெண்குட்டந்தீர்ந்து கவுடதேசத்தரசன் பொன்னிற
மானுன்தேகம்,நீசச்-சாதியின்மூவர் புலைத்தன்மைபோய்க் கதி
சார்ந்தாரதுவேதெய்வீகம்,ஒரு-வேதியன்வாயிலோர் சோறிட்
டுக்கூடுபோய் விட்டிற்புகுந்ததுகாகம், பின்னும் - நீதறுவத்தா
லெப்போதுந்தரிசனம் செய்திடுமோர்புலிநாகம்,முன்னம்-பெய்
தது பொன்மழைமேகம் இந்தவைபோகமின்னமனேகம் (எந்)

உ. கழுகுபுசிக்கத்தவறியிறந்த கயலுமடைந்ததுகதியே,நீரில்-மூழ
கியெழும்ப விளமையைத்தந்து முதுமையைதீர்ந்ததிப்பதியே,
கூவியழுதபுலிக்குட்டி உண்டிளப்பாற யருகில்வந்ததுபயோ
ததியே, கொலை-பழிசெய்யும்பார்ப்பா னொருவனுக்குமுத்தி பா
லித்தநயன்சந்நிதியே, அதனை-லித்தையேதினந்துதியேசெய்து
மேலிட்டுச்சொல்லும்சுருதியே (எந்)

ங. எங்கெங்குந்தானிதைப் பூலோககயிலாச மென்றுரைப்பாரொ
ருபேரும், இதில்-அங்கமிறந்து திரும்பிப் பிறப்பாரோ வாடிய
தாளைக்கண்டோரும், மலர்ப்-பங்கயன்மால்முதலோர் வந்தரு
ச்சனைபண்ணுகிறாரதைப்பாரும், ஒளி - பொங்குந்தொளாயிரத்
தொண்ணூற்றொன்பதுபங்குக்கலையிதிலாருந்,தல-மெங்கெங்
மோர்கலைசாரு மதுவுமிங்காத்தசாமத்திற்சேரும (எந்)

கீர்த்தனம்-இ-ம்-பியாகடை-ஆதிதாளம்

பல்லவி.

எந்நாளும்வாசமாய் சிதம்பரஸ்தலத்திலே இருக்கத்தவஞ்செய்தே

அநுபல்லவி.

பன்னகம்புலிநாகம் பார்ப்பான்புலையன்முதற்
பத்திசெய்தேயிதின் முத்திபெற்றிடலாலே (எந்)

சரணங்கள்.

௧. முந்தியன்னையுதரந்தனிலேகரு விருந்துதிருவயிறுநொந்து பசி
யொடு பிறந்துநிலமிசை தவழ்ந்துதளர்நடைநடந்து பருவமாகி
இந்தமனை மனைவிமைந்தர்நிதிபலவு மெந்தனுடைமை யிது
சொந்தமெனவேசொல்லிச்சிந்தைதனின்மத மிகுந்துபலபலக
ந்தைகளே செய்துதிரிந்ததல்லாமல் (எந்)

௨. வட்டஸ்தனத்திற் றொங்கவிட்ட பணியழகும் ஒட்டிவச்சிர மி
ழைத்தசுட்டியழகும் நுதற்பொட்டழகு மிடையிற் பட்டழகு
முடைய கட்டழகியர்வலையிற் கிட்டியறிவழிந்து மட்டியென
வேதொடர்ந் தொட்டினின்மொய்த்தசிறு சிட்டெனவேயவர்க
ள் தொட்டுமுயக்கிலகப்பட்டுமிகவுமதிகெட்டு மெலிந்தலைந்திட்
டதல்லாமல் (எந்)

௩. தேசமதற்குளொரு காசுகொடுக்கப் பிரையாச மனத்தர்தமைப்
போஜனெனத்துதிசெய் தாசுமுநற்கவிகள் பேசியலுத்துமனங்
கூசுவதேயல்லாம லீசனதிகப்பிர காசனணிசருமத் தூசனுமை
மகிழுல்லாசனடியவர்கள் நேசனிலகுகயிலாசன் கனகசபைவா
சன்புலிசைநடராஜனைசேவித்து (எந்) (௫)

கீர்த்தனம்-இ-ம்-மத்தியமாவதி-ஏகதாளம்

பல்லவி.

பலமந்திரத்திற்கும் பலமந்திரம்பொன்னம்
பலமென்னும் மந்திரமே

அநுபல்லவி.

புலவர்க்கும்முநிவர்க்கும் பலவர்க்குந்தியானிக்கப்
பொதுவாயிருக்குமந்திர மதுவேசுருக்கமந்திரம் (பல)

சரணங்கள்.

௧. செனனமரணவாதை நீக்கியமந்திரஞ் சேருமும்மலமாயைபோ
க்கியமந்திரம், மனதின்மெய்ஞ்ஞான முண்டாக்கியமந்திரம் மந்
திரத்திற்கெல்லாஞ் சிலாக்கியமந்திரம் (பல)

௨. முதுமைபோயிளமை கொடுத்திட்டமந்திரம் மூன்றுபுலையர்நீச
ம்விடுத்திட்டமந்திரம், கதியிலோர்கண்காக மடுத்திட்டமந்திர
ங்காட்டுப்புலியைப் பாம்பைதடுத்திட்டமந்திரம் (பல)

ங. அதுவேயெவர்க்குங் காயசித்திக்குமந்திரம் அதுவே நினைவின் படிசித்திக்குமந்திரம் அதுவேயழிவிலாத முத்திக்கு மந்திரம் அதுவேசிந்தித்த நெஞ்சிற்றித்திக்குமந்திரம் (பல) (சு)

## கீர்த்தனம்-இ-ம்-மோகனம்-சாப்புதாளம்

### பல்லவி.

பரந்தனையடைந்திட வேணுமென்ருற்சிதம்
பரந்தனையடையுங்கள் மாந்தர்களே

### அநுபல்லவி.

வந்தனை தருமிந்தத் தலந்தனிலேயிருந்த
மாந்தரெல்லாருந்தவ வேந்தரே (பரந்)

### சரணங்கள்.

க. காட்டிலிருக்கின்ற புலியும்பாம்பும்பெற்ற காட்சியுங் கேட்டிருப்பீர்களே, வீட்டிலிருக்கின்ற காகமுயர்ந்தமேற் வீட்டினிற் சென்றதுங் கேட்டிருப்பீர்களே (பரந்)

உ. சாதியிலீனமுள்ள புலையர்மூவரிதிற் றனித்தனியே புனிதராகினுர், வேதியரிகழ்திக பாவியொருவரிதில் மேவிப்பரகதியிலேகினுர், வெள்ளியினுலெங்க ளையனிருக்கச்செய்த வீட்டைவடகயிலையென்பாரே, தெள்ளிசெம்பொன்னினுற் செய்தவீடுதன்னைத் தென்கயிலாசமென்பாரே (பரந்) (எ)

## கீர்த்தனம்-இ-ம்-ஆரபி-ஆதிதாளம்

### பல்லவி.

ஒருக்கால்சிவசிதம்பரமென்று நீசொன்னு லிருக்காதூழ்வினையே

### அநுபல்லவி.

கருக்காறருக்கிதுதெரியும் பொதுவிலொரு
காலைத்தூக்கிநின்ற கோலத்தைமனதில்வைத் (தெர்)

### சரணங்கள்.

க. சூழ்வலியுடையபஞ்சாக்கினி யிடைநின்றுசொரூபங்கரிவானேன், மனை-வாழ்வைவெறுத்துக்கனி காயுஞ்சருகுதின்று மாதவம்புரிவானேன், பல - வேள்விகள்செய்தந்த வோமகுண்டத்தினெய்யை வீணிலேசொரிவானேன், காதுங் - கேள்வியில்லாத முழுமோநிகளாய்த்தலையிற் கிளைத்திட்ட சடைதனைவளைத்திட்டுத்திரிவானேன் (ஒருக்)

உ. வேதமந்திரஞ்சொல்லி யாயிரத்தெண்டன்புவிமீதினில்விழுவானேன், இரு-பாதமுஞ்சிவந்திடத் தலங்கடோறுந்திரிந்து பல தெய்வர் தொழுவானேன், கொல்லன் - ஊதும் துருத்திபோல

வாயுவைக்கும்பித்துடல் யோகத்திலெழுவானேன், ஐந்துபூதங்
களுங்கலங்க வங்கப்பிரதட்சணமாய்ப் புரண்டுபுரண்டு மதிமரு
ண்டெழுந்தழுவானேன் (ஒருக்)

௩. உருக்கியுடலைமெத்தவருத்தி யுறக்கத்தையு மூணையுந்துறப்பா
னேன், சிலை-யரைக்கில்லாநிருவாணியாகி லோகவாழ்க்கையனை
த்தையும்மறப்பானேன், வரு - நரைக்குந்திரைக்குங் கற்பமருந்
திச்சித்தர்களாகி நாடெங்கும்பறப்பானேன், சபைத்-திரைக்கு
ள்ளேமறைவாகியிருக்கும் ரகசியத்தின் திறந்தெரியாமல்வீணே
யிறந்தின்னம்பிறப்பானேன் (ஒருக்) (அ)

## கீர்த்தனம்-இ-ம்-பைரவி-ஆதிதாளம்

பல்லவி.

சிவசிதம்பரமென்று நினைப்பாயே உனக்
கபசெயம்வாராதென்று மனப்பேயே

அநுபல்லவி.

கவசமுமுனக்கிதென்றறிவாயே நல்லகனகசபையில்புலி
பனகமுனிவர்கள்தொழ வனவரதநடனந்தனையரனும் (சிவ)

சரணங்கள்.

௧, கன்மவினைப்பேய்களை யாறலாமே பொல்லா மன்மதவாதை தீர்
ந்து தேறலாமே, சென்ம சாகரக்கரை யேறலாமே யெழுந்து
சென்றபோதிலும் சும்மா நின்றபோதிலு மொன்றைத் தின்ற
போதிலும்படுக்கின்றபோதிலு நீ (சிவசித)

௨, மனிதருறவை மெய்யென்றிருக்காதே கதிர்முன் பனியானவாழ்
வைச்செல்வஞ் செருக்காதே தனிவேதமந்திர மிதைச்சுருக்கா
தே பசிதந்தவேளையு மிடர்வந்தவேளையும் மனம்நொந்தவேளை
யும்பின்னொந்தவேளையும் நீ (சிவசித)

௩; ஒருமந்திரத்தை நீசெபிக்காதே யிந்த திருமந்திரமன்றி யொன்
றும்பலிக்காதே கருமந்தப்பிதஞ்செய்து தவிக்காதேதில்லைக்கா
டினிலைபன்செய்த வாட்டினிலுறுதியைக் காட்டிடுமொன்றிலு
மாட்டினில்லாதே (சிவசித) (௯)

## கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்

பல்லவி.

இன்னமுமொருஸ்தலமிருக்குமென்றெருக்காமே
ஏன்மலைக்கிறாய் மனதே

அநுபல்லவி.

சொன்னசொன்னஸ்தலங்களெங்குமோடிக்களைத்துச்
சோதித்தறிந்தாலீந்த ஆதிசிதம்பரம்போல் (இன்ன)

க. [illegible]
ரைருசிமாவிலிருப்பது[illegible]வாசம், [illegible]
கிறமொன்றுனுமந்த முருக்கினி லுண்டோ வாசம
தரிக்கும்வச்சிரக்கல்லுந் தறிப்பமொத் திருந்தாலும தறிப்படைத்தள
ளிவச்சிரந் தனைத்தரிப்பதல்லாசம், உரைக்கும் ஸ்தலமனந்த
ந்தரைக்குளிருந்திட்டாலும் உம்பர்வந்துதொழும் பொன்னம
பலமே கயிலாசம இன்

உ. உப்புங்கர்ப்பூரமு மொன்றைப்போலிருந்தாலு மூரெங்குமெ
ரியதாய்க் கர்ப்பூரந்தனைச்சொல்லாமோ, இப்புவியிலெவர்க்கும
யோக்கியந்தருங்கா விரிக்கேற்பதுசணுமோ
ஒப்பரிதாய்விளங்குந் தெய்விககங்கையாற்றுக் குவமையெடுத்துரை
ப்பதுவர்க்கழியாற்றுநீரோ, அப்படிபோலனேகம் ஸ்தல மிருந
தாலுமந்தவல்லல்வினைதொலைக்குந்தில்லைப்பதிக்குநேரோ இன

ங. விண்ணுலகத்திலு மீனின மெல்லாங்கூடி வெண்மை நிறமா
மொரு தண்மதிமுன்னில்லாது, தண்ணுலவியவல்லி திரளாய
பூர்த்தாலுமொரு தாமரைக்கொவ்வாது
மண்ணுலகத்திலுள்ள தருக்களனைத்துங்கூடி மருவுலவுங் கற்பகத்
தருவுக்கிணைவராது, புண்ணியஸ்தலங்கள்பலவிருந்தும்நடேசன
வாழும்புண்டரீகபுரம்போற் கண்டுசொல்லவேறேது இன். ஒ

கீர்த்தனம்-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம.

பல்லவி

காலைதூக்கிநின்றாடுந்தெய்வமே யென்னைக்
கைதூக்கியாள் தெய்வமே

அநுபல்லவி.

வேலைதூக்கும்பிள்ளை தனைப்பெற்றதெய்வமே
மின்னும்புகழ்சேர்தில்லைப் பொன்னம்பலத்திலொரு-காலை

சரணங்கள்.

க. செங்கையின்மான்தூக்கிச்சிவந்தமழுவுந்தூக்கிஅங்கத்திலொரு
பெண்ணையனுதினந்தூக்கி, கங்கையைத்திங்களைச்சடித்தசடை
யிற்றூக்கி இங்குமங்குமாய்த்தேடி யிருவர்கண்டறியாத. காலை
உ. நந்திமத்தளந்தூக்க நாரதர் யாழ்தூக்கத் தொந்தமென் றயன
றாளஞ் சுதியொடுதூக்க, சிந்தைமகிழ்ந்துவாணோர் செண்டிமே
ற்கரந்தூக்க முந்துமலவியுடையமுயலகனுனைதூக்க. காலை

௬. கும்பமண்டலத்தைத்தூக்கக் கொடுங்கை குப்பத்தைத்தூக்கப் பைம்பொற்சுவர்கொடுங்கைப் பாரத்தைத்தூக்கக், எம்பிரானத் தைதவிராட்டி தயதாமரை தூக்கச் செம்பொன்னம்பலத்திலே தெற்குமுகமாயொரு. காலே. யக

கீர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி-ஏகதாளம்.

பல்லவி.

உன்முகம்பார்த் தபயமென்று லென்முகம்பார்த் தருளாமற் றென்முகமாயிருப்பதென்ன வைம்முகத்தையாவே

அநுபல்லவி.

மின்முகம்பார்த்தாடுந்தில்லை மேவும்நடேசரேயருக்கன் தன்முகம்பார்த்திடவிரும்பும் தாமரைபோல்நான்விரும்பி-உன்

சரணங்கள்.

௧. யார்க்கோவந்தவிருந்தெனவே யறியாதுபோலிருந்தால், பார்க் கிறவர்யாரினி யென்பரிதாபமுழுதநீ, தீர்க்கிறதெய்வ மலுதெ ய்வமுனையன்றியுண்டோ, நீர்க்குமிழி யாக்கைதனை நீக்குமுன் வந்தாட்கொள்வையென். உன்

௨. தூக்கியதாளினைமுடிமேற் சுமக்குமுயலகன்போலப், பாக்கிய ஞ்செய்யாதகொடும் பாதகனுதயினாலே, கூக்குரல்செய்தோலமி ட்டுக் கூவியுன்றன் கோயில்தனை. நோக்கிவலமாகவந்து நூறு தெண்டனிட்டெழுந்து. உன்

௩. காரினிற்பூங்கமுகுதொடுங்காவனந்தமேவுபுலியூரினிற்காண்பவர் க்குமுத்தியுதவுமநடராயர்பாரினிலிவ்வுருவெடுத் துன்பதமலர்க் காளாகமனிரினிலம்புலிபோலேநிலைகலங்கித்தலைவணங்கி-உன்

கீர்த்தனம்-இ-ம்-சாவேரி-திரிபுடை தாளம்.

பல்லவி.

ஏதுக்குதவி யிந்தகாயம் சுமந்ததினால் வருவதேதாயம்.

அநுபல்லவி.

சீதப்பிறையணி சோதிச்சடைமுடி தேவன்புலிசைமே வம்ப லவன்பொற், பாதம்பணிவிடைக்காகித்தவஞ்செய்து பவத்தை யொழிக்காமலவத்திலேபிறந்த தேது

சரணங்கள்.

௧. தரும்ராசன்தறிக்குக்கட்டை பிரமன்தைக்கு மென்பதுபீற்றச் சட்டைப், திரும்பிகட்டகொருகணம குமடை காலன் கிட்டும்போதி னிலொட்டைமட்டை, கருமேயிவைமெய்யென் போர்க்குமபெ

[illegible] மாங்கிசமுஞ் [illegible]
கனையொழியொழி யாருமசும்பொறுது நீரின்மேற்குமிழ்.

விஞ்சுமும்மலஞ்சேரும்விடுபுலவேட்டிரைவிருக்குங்காடு-சஞ்சி
தப்பறவைக்கோர்கூடு-இந்தச் சதமென்றெண்ணுவதெல்லாங்
கேடு-மஞ்சின்மேவிடுவானவல்வினைகூறும் - வாழ்வைநீலை மெ
ன்னுமயங்கித்தினந்தேடாறுக், தஞ்சிலைபொறிகலங்கி மதிமாறா
ஞ்சுவாசமடங்கிறைற் றொடக்கூடாதுநாறும், எது

௩, கொடுவினைமுளைக்குந்தோல்மூட்டங்கமுகு கொடும்காய்நரிக்கு
ம்விருந்தாட்டஞ், சுடுகாட்டக்கிரிக்கிடுகாட்டி மர்தச் சூட்சப
பார்த்திடில்பொய்மலர்ட்டம் விடுவிடுருவெடுத்திடுவதனை முன்
னைவினைக்கிருபை மருந்தளிக்கவல்ல அன்னைபடரும்மெய்யன்
பொன்னம்பலவனடிதன்னைப் பணிந்தாற்பிறவிநோய் தனிந்
தோம்பின்னை, எது, பூ

இந்தாஸ் தாது,

கீர்த்தனம்-இ-ம்-ஆரபி-ஆதிதாளம்.

பல்லவி,

என்னத்துணிவாய்நான் பயப்படாமல்வந்துன்
னிணையடிபணிவேன் ஐயா,

அநுபல்லவி,

பொன்னம்பலவாணனே முன்னமுன்றனைப்பாடும்
புலவனைநீவிழுக்கும் புதுமைதைக்கேட்டிருந்தும்

சரணங்கள்,

௧, பாய்கிறமாடொன்று வாயிலில்மேவுதே பாம்பும்புலியுமிரு ப
க்கமுந்தாவுதே, பேயும்பூதமும்முன் பின்னுமுலாவுதே பிடி
தகைமாண்டம வெடித்திடக்கூவுதே, எ

௨, கொழுந்திட்டோங்குமறம் பிழம்பாகு முன்னுமுப்பு கொழு
தில்லைக்காடுநீ குடியிருக்கபொருப்பு, ஒழிந்திருக்காதெப்போ
முனைநெஞ்சிற்கருப்பு, வனைத்தான்பித்த னென்பதை நினை
தாற்றேன்னுமவெறுப்பு, எ

௩, ஆதியின்மாலயனுவடிமுடிதேடுவோனே யாகியபக்தவிலை
றருமனைநபாடுவோனே பாதிமதியைச்சடைமீதினிற் சூடு